www.tamilarangam.net



# சந்திரிகா அரசுக்குப் 'பாடம்'

ஈழத்தமிழினத்தின் விடுதலை ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தியாக வேள்வி நடாத்தும் தமிழீழ விடுதலைப் புலிகளை சமீப காலமாக 'தப்புக் கணக்கு'ப் போட்டு வந்த சந்திரிகா அரசுக்குத் தெளிவான 'பாடம்'ஒன்று புகட்டப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தைக் கைபற்றியதை வைத்துக் கொண்டு இப்படியொரு எண்ணத்தை விதைக்க முயன்றது பாரதூரமான தவறு என்பதை முல்லைத்தீவு முகாம் தகர்ப்பு ஆட்சியாளர்களுக்கு நன்கு விளக்கியிருக்கிறது.

'முழுப் பூசனிக்காயைச் சோற்றிலே மறைக்க' முடியுமா? முல்லைத்தீவில் இறந்த ராணுவத்தின் தொகை கிட்டத்தட்ட சுமார் ஆயிரத்து ஐநூறை எட்டியிருக்க, இறந்தலர் தொகை என்னவென்று சொல்லாமல், சிதைந்து சின்னாபின்னமாகப் போய் விட்ட முகாமைத் தாம் கைப்பற்றி விட்டதாக அரசு வேறு தம்பட்டம் அடிக்கிறது. முகாமைப் பாதுகாக் முடியாமல் அழிந்துபோன படைக்கு உதவிக்காக வந்தவர்களும் அழிந்து போன 'கதை' எமக்குத் தெரியாதல்ல. பதின்மூன்று ஆண்டு கால நீண்ட நெடும் போரில் புலிகள் வீர வரலாறு ஒன்றையே முல்லைத்தீவில் படைத்திருக்கிறார்கள்.

ஆனாலும் தமிழரின் இந்தப் பெரும் வெற்றியை ஒப்புக் கொள்ள சந்திரிகாவுக்கு ஏனோ முடியவில்லை. தமது பலத்தை எவருமே குறைத்து மதிப்பிடக் கூடாது என்பதற்காக, சந்திரிகா அரசு பரந்தன், கிளிநொச்சிப் பகுதியில் சமீபத்தில் இடம் பெயர்ந்து புதிதாக வாழ்க்கை தொடங்கியுள்ள அப்பாவித் தமிழர்கள் மீது, குண்டுமாரி பொழிந்து, தமிழினத்தைப் பூண்டோடு அழித்துவிட இப்போது கங்கணம் கட்டி நிற்கிறது.

தம்மை எதிர்த்துப் போரிடும் புலிகளோடு பொருத வக்கற்றவர்கள் அப்பாவி மக்களை கொன்று குவிப்பது எந்தத் தர்மத்தில் வருகிறது என்று சொல்வார்களா?

நமது நாட்டில் நடக்கும் பிரச்னை உள்நாட்டுப் பிரச்னை என்றும், மூன்றாம் நாடு தலையிட வேண்டிய அவசியமில்லை என்று சிங்கள அரசும், அரசைச் சார்ந்தவர்களும் ஓலமிட, ஒரு இனத்தையே குண்டுகளைப் போட்டு அழித்துவிட முயலும் சிங்கள அரசின் அநாகரிகமான- மிருகத்தனமான கண்மூடித்தனமான கைங்கரியங் களுக்கு இங்கிலாந்திலுள்ள 'ரைம்ஸ்' போன்ற பத்திரிகைகள் 'தீபம்' ஏற்றியும், தூபம் போட்டும் ஆதரித்து வருகின்ற அதர்மச் செயல் கண்டனத்து க்குரியது. இரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் பிரஞ்சு தேசத்தை ஆண்ட மன்னனான நெப்போலியன் போனபாத் என்பவன், இங்கிலாந்து நாடிடைப் பற்றி பின்வருமாறு வர்ணித்திருந்தான்: 'கடைக்காரரகள் வாழும் நாடுதான் இங்கிலாந்து'.

அவன் அன்று சொன்னது உண்மை என்பதை 'ரைம்ஸ்' போன்ற பத்திரிகைகளும், அரசியல்வாதிகளும்



நிரூபித்து வருகிறார்கள்.

இலங்கையில் போர் தொடரு கின்ற வரைக்கும், இலங்கை அரசுக்கு ஆயுதங்களை இங்கிலாந்து விற்றுச் சம்பாதிக்கலாம் என்ற ஆசையுடன் இருக்கும் இங்கிலாந்தை ஆதரிக்கும் நோக்குடன் 'ரைம்ஸ்' எழுதிவருகிறது. இந்தத் தேசிய ஆசைக்கு அப்பாலும் 'ரைம்ஸ்' பத்திரிகைக்கு ஏதோ நோக்கம் இருப்பது போலத் தெரிகிறது. அந்த நோக்கத்தைக் கண்டுபிடித்து அம்பலப்படுத்துவது ஈழத் தமிழரது கடமை.

முல்லைத்தீவு முகாம் சரிந்து, முறிந்து, நொருங்கி 1500 அரசின் ராணுவ வீரர்கள் புலிகளினால் அழிக்கப்பட்டபோது, கொய்யோ முறையோ என்று கூவி அழுத 'ரைம்ஸ்' யாழ். குடாநாட்டில் ஐநூறாயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் சிங்கள படையின் குண்டு வீச்சினால் அஞ்சி நடுங்கி உடுத்த உடுப்போடும், எடுத்த பொருளோடும் குடாநாட்டை விட்டு வெளியேறியபோதோ, அல்லது அவ்வாறு வெளியேற எத்தனித்த போது, கிளாலியில் சிங்கள விமானப் படையால் குண்டு வீசித் தாக்கப்பட்டபோதோ,அந்த அப்பாவி உயிர்களைப் பற்றிஎழுதாத 'ரைம்ஸ்', சிங்கள சின்னத்தனத்தைக் கண்டி க்காமல் வாய்மூடி மௌனியாக இருந்துவிட்டு,இப்போது ஒப்பாரி வைக்கிறது.

இலங்கையில் சிங்கள அரசு செய்கிற கொடுமையைக் காட்டிலும், மோசமான ஒரு அரசியல் கொடுமையை 'ரைம்ஸ்' செய்து வருகிறது.

இந்தப் பத்திரிகையின் எழுத்துக்கள் இலங்கைத் தமிழினத்தின் போராட்டத்தை சர்வதேச ரீதியில் பெருமளவு மானபங்கப் படுத்தி வருகிறது. இதனைப் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் நன்க உணரைவேண்டும். உணருவது மட்டும் போதாது. 'ரைம்ஸ்' பத்திரிகையை எந்த எந்த வழிகளிலோ, அந்தந்த வழிகளில் எல்லாம் கண்டிக்க வேண்டும். இது புலம் பெயர்ந்த தமிழரின் உடனடிப் பணி.

விடுதலை இயக்கம் சாவதில்லை என்ற உண்மையும், நாட்டின் விடுதலைக்காக நச்சுக்குப்பிகளோடு போராடும் ஒரு புனிதமான இயக்கத்தை இலகுவாக அழித்துவிட முடியாது என்பதும் சந்திரிகாவுக்கு இன்னுமே புரியாமல் இருப்பது வியப்பாக இருக்கிறது. விடுதலை இயக்கத்தில் உள்ளவர்கள் வீர சுவர்க்கம் அடையலாம்.

ஆனால் விடுதலை உணர்வும், விடுதலை இயக்கமும் வாழ்ந்து கொண்டேதான் இருக்கும்.

இந்தப் 'பாடம்'சந்திரிகா அரசுக்கும், சிங்கள ராணுவத்துக்கும் முல்லைத்தீவு முகாம் தாக்குதலில் நன்றாகவே போதிக்கப்பட்டிருக்கிறது. உண்மை நிலையை உணராதவர்கள் போலப் பாசாங்கு செய்பவர்களையும், அகங்காரத்தோடு ஆட்சி நடாத்து பவர்களையும் இதைவிட எப்படி 'உணர்த்துவது' என்பது தெரியவி ல்லை.

யாழ்ப்பாணத்தைப் பிடித்துவைத்திருப்பதாக நினைத்துக் கொண்டு, அப்பாவிகளை கொன்று குவிக்கப்படுவதை எவருமே ஏற்றுக் கொள்ள முடியாது. ஆயிரக் கணக்கில் அர்த்தம் இல்லாமல் யாழ்ப்பாணத்தில் குவிக்கப்பட்டிருக்கும் படைகளை வாபஸ் பெற்று, அரசு தமிழினத்தின் உண்மைப் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை ஒன்றை நடாத்த வேண்டும்-

தமிழீழம் கிடைக்கும் வரை- தனி ஒரு ஈழத் தமிழன் உயிரோடு வாழும் மட்டும் ஈழப் போராட்டம் ஓயாது! என்பதை சந்திரிகா உணர்ந்து கொண்டு பேச்சுக்குத் தயாராக வேண்டும் என்பதை 'ஈழகேசரி' வற்புறுத்துகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# புலிகளின் பொறியில்

★ சத்யன்

முல்லைத்தீவுச் சமர் முடியுமுன்னரே கிளிநொச்சியில் ஒரு யுத்த களத்தை அரச படைகள் திறந்துள்ளன. 'ரிவிரெச' நடவடிக்கை மூலம் யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிய பின் இராணுவ சமநிலையில் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை என்பது முல்லைத்தீவுச் சமரின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

இதனால் தமது பலத்தைக் காட்டுதவற்காக பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை அரசு முன்னெடுக்கும் என்பது எதிர்பார்க்கப்பட்டது தான். எனினும் இவ்வளவு விரைவில் கிளிநொச்சித் தாக்குதலை ஆரம்பித்தது தான் அனைவருக்கும் வியப்புக்குரியது. கிளிநொச்சி நடவடிக்கையை நிதானமாக அரசு ஆரம்பித்திருந்தால் ஏற்கனவே திட்டமிடப்பட்ட வன்னித் தாக்குதலுக்கான முன்னோடியாக இதனைக் கருதியிருக்க முடியும். ஆனால் முல்லைத்தீவுச் சமரில் ஏற்பட்ட தோல்வியினால் தமது பலம் குறைந்து விடவில்லை எனக் காட்டுதவற்காகவே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருப்பதாக இப்போது கருதப்படவேண்டியுள்ளது. கிளிநொச்சித் தாக்குதலில் அரசின் தந்திரோபாயம் என்ன மூலோபாயம் என்ன என்று ஆராயும்போது இராணுவ நலன்களை விட அரசியல் நலன்களை முதன்மைப்படுத்தியே இந்தத் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டிருப்பது தெரிகின்றது.

முல்லைத்தீவுத் தாக்குதலில் இறந்த காயமடைந்த பிடிபட்ட படையினர் தொடர்பாக எந்தவித தகவல்களையும் தெரிவிக்க முடியாத நிலையில் தாம் உள்ளதாகத் தெரிவித்த ஒரு நிலையிலேயே கிளிநொச்சியை நோக்கிய தாக்குதலை அரச படைகள் ஆரம்பித்தன. முல்லைத்தீவில் தரையிறக்கப்பட்ட படையினரின் முன்னேற்றத்தை எதிர்த்து புலிகள் கடுமையான தாக்குதல் ஒன்றை நடத்திக் கொண்டு இருந்த வேளையிலேயே புதிய தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதென்பதும் கவனிக்கத்தக்கது. முல்லைத்தீவில் ஏற்பட்ட தோல்வியை மூடிமறைக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இராணுவம்

நோக்கிலேயே புதிய தாக்குதலை அரசு ஆரம்பித்திருக்கிறது என்பதையே இவை அனைத்தும் உணர்த்துகின்றன.

இராணுவ நோக்கம்

முல்லைத்தீவிலும் அலம்பிலிலும் இராணுவம் தொடர்ந்து நிலை கொண்டிருந்தால் கிளிநொச்சியை நோக்கிய படையெடுப்பில் இராணுவ நோக்கம் உள்ளதென்பதை தெளிவாகக் கூறியிருக்க முடியும். ஏனெனில் வடபகு[illegible]க்கான தரைப்பாதை [illegible]ஒன்றைத் திறக்கவேண்டிய அவசிய[illegible] அங்கு உள்ளது.

ஆனையிறவு - கிளிநொ[illegible] முல்லைத்தீவு - அல[illegible] வெலிஓயா என அனுராதபு[illegible] பாதை ஒன்றை ஏற்படுத்தும் [illegible] அரசாங்கத்துக்கு பல மாதகாலமாகவே இருப்பது அனைவருக்கும் தெரிந்தது தான்.

யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதை ஒன்றைத் திறப்பதைப் பொறுத்தவரையில் இந்தப் பாதையே இலகுவானதென அரசாங்கம் கருதுகின்றது. அத்துடன் இராணுவ ஆலோசகர்களும் இந்தப் பாதையில் பல இராணுவ முகாம்கள் இருப்பது மற்றும் கடற்கரையை அண்டியதாக இப்பாதை அமைந்திருப்பது ஆகிய தன்மைகள் பாதுகாப்பை உத்தரவாதப்படுத்தும் என ஆலோசனை வழங்கியிருந்தனர்.

ஆனால் இந்தப் பாதையைத் திறப்பதாயின் ஆனையிறவிலிருந்து கிளிநொச்சியை நோக்கிய [illegible]டையெடுப்பை ஆரம்பிப்பதை விட முல்லைத்தீவைப் பாதுகாப்பதிலேயே அரசு அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும். ஆனால் முல்லைத்தீவில் தரையிறக்கப்பட்ட படைகள் அங்கு புலிகளால் சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் அவர்களைக் காப்பாற்றுவதை விட அல்லது இழந்த முகாமை மீண்டும் கைப்பற்றுவதை விட புதிய இலக்குடன் புதிய நடவடிக்கை ஒன்றை அரசு ஆரம்பித்திருப்பதில் இராணுவ உபாயம் ஒன்றைக் காண முடியவில்லை. முற்றுகைக்குள்ளாக்கப்பட்ட படையினரைப் பாதுகாப்பதற்குப் பயன்படுத்த வேண்டிய இராணுவ வளங்கள் அனைத்தும் புதிய நடவடிக்கை ஒன்றை ஆரம்பிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டன.

இதனால் இராணுவ ரீதியில் ஒரே நன்மையை மட்டுமே அரசு பெற்றிருக்க முடியும். அதாவது முல்லைத்தீவில் படையினரைச் சுற்றி வளைத்துள்ள புலிகளைத் திசை திருப்பிவிட்டு, தமது படையினரை அரசு மீட்டிருக்கமுடியும். முல்லைத்தீவு முகாம் மீதான தாக்குதலை முறியடிப்பதற்காக அரசு மேற்கொண்ட 'மும்முனைத் தாக்குதல்' நடவடிக்கை பிச்சை வேண்டாம் நாயைப் பிடி என்ற நிலையிலேயே முடிவடைந்திருக்கிறது. அதாவது முல்லைத்தீவு இராணுவ முகாமைக் காப்பாற்றுவதற்காக நூற்றுக் கணக்கான இராணுவத்தினரை கொண்டு சென்று அலம்பிலில் அரசாங்கம் இறக்கியது. இறுதியில் முகாம் போனாலும் பரவாயில்லை. புதிதாக இறக்கியவர்களையாவது காப்பாற்றினால் போதும் என்ற நிலையே அரசாங்கத்திற்கு ஏற்பட்டது.

**வெளிப்பட்ட உண்மைகள்**


முல்லைத்தீவு இராணுவ முகாம் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது பல உண்மைகளை வெளிப் படுத்தியது. யாழ்ப்பாணத் தாக்குதலால் புலிகளின் பலம் 70 வீதம் குறைக்கப்பட்டு விட்டது என பாதுகாப்பு பிரதியமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தை கணக்கிட்டிருந்தார். யாழ்ப்பாணத்தைப் பிடித்து விட்டோம். இனி வன்னியைப் பிடிப்போம் கிழக்கையும் இரண்டு நாட்களில் பிடித்து விட முடியும் என இராணுவம் பெருமை பேசியது. இந்தப் பெருமைகள் அனைத்தும் முல்லைத்தீவுத் தாக்குதலால் சிதறடிக்கப்பட்டு விட்டன.

அத்துடன் இனிமேல் மரபுரீதியான யுத்தம் ஒன்றில் புலிகளால் ஈடுபடமுடியாது, கெரில்லாத் தாக்குதல்களை மட்டுமே அவர்களால் நடத்த முடியும் என



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




இராணுவத்தின் உயர் அதிகாரிகள் பலரும் கூறியிருந்தார்கள். யாழ்ப்பாணத்தில் வைத்து புலிகளின் முதுகெலும்பு உடைக்கப்பட்டுவிட்டது என்ற கருத்திலேயே இவ்வாறான ஆரூடங்களை அவர்கள் வெளியிட்டார்கள். ஆனால் இப்போது, மரபு ரீதியான தாக்குதல்களில் ஈடுபடக்கூடிய சக்தி தம்மிடம் உள்ளதை விடுதலைப் புலிகள் தெளிவாகவே வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். சுமார் 2000 இராணுவத்தினருடன் பலத்த பாதுகாப்புடன் அமைக்கப்பட்டிருந்த பாரிய இராணுவ முகாம் ஒன்றைத் தாக்கி முற்றாக அழித்துள்ளதுடன் மட்டுமன்றி பெருமளவிலான கடற்படை - விமானப்படையினரின் பாதுகாப்புடன் கொண்டு வரப்பட்ட படையினரையும் தாக்கி அவர்கள் திருப்பியனுப்பியுள்ளார்கள். மரபு ரீதியான படை நகர்த்தலுக்கு தாம் தயாராகவுள்ளதை மட்டுமன்றி மற்றொரு விடயத்தையும் இத்தாக்குதலின் மூலம் புலிகள் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். அதாவது வன்னிப் பகுதியில் பாரிய படையெடுப்பு ஒன்றை படைகள் மேற்கொண்டால் அதனைச் சந்திக்க தாம் தயாராகவுள்ளதையும் இத்தாக்குதலின் மூலம் புலிகள் உணர்த்தியிருக்கின்றார்கள். இதனால் அரசின் உத்தேச வன்னித் தாக்குதல் திட்டம் பாதிக்கப்படக்கூடும் என பல இராணுவ ஆய்வாளர்களும் கருத்து வெளியிட்ட ஒரு தருணத்திலேயே கிளிநொச்சித் தாக்குதலை அரசு ஆரம்பித்தது.

## அரசியல் நலன்கள்

முல்லைத்தீவு வீழ்ச்சியடைந்த நிலையில் உடனடியாகவே கிளிநொச்சியை நோக்கிய ஒரு சமர்க்களத்தை அரச படைகள் ஆரம்பித்தது. தமது அரசியல் நலன்களுக்காகவே இராணுவத்தைப் பலியிட ஜனாதிபதியும் அவரது மாமானார் ரத்வத்தையும் தயாராகவுள்ளதையே வெளிப்படுத்தியது. முல்லைத்தீவுச் சமர் பல உண்மைகளை வெளிப்படுத்தியது. முக்கியமாக இராணுவச் சமநிலை எவ்வாறு உள்ளது என்பதை இச்சமரின் மூலம் தெளிவாக உணரக்கூடியதாகவுள்ளது. இந்த நிலையில் மற்றொரு சமர்க்களத்தை இராணுவ ரீதியான அறிவுள்ள எவருமே ஆரம்பிக்கத் தயங்கியிருப்பார்கள். ஆனால் முல்லைத்தீவில் ஏற்பட்ட தோல்வியை மற்றொரு இராணுவ நடவடிக்கை மூலமே மூடிமறைக்க முடியுமென ரத்வத்தை கருதினார். எதிர்க்கட்சிகளின் பிரச்சாரத்தால் ஏற்பட்ட அரசியல் ரீதியான பின்னடைவை மூடிமறைப்பதற்கு இவ்வாறான நடவடிக்கை ஒன்று அரசுக்கு மிகவும் தேவையாகவும் இருந்தது.

ஆனையிறவிலிருந்து புறப்பட்ட படைகள் பரந்தனைப் பிடித்துவிட்டதாக பலத்த பிரச்சாரங்கள் நடத்தப்பட்ட பின்னணியில் முல்லைத்தீவைக் கைவிட்டு அரச படைகள் முற்றாக வெளியேறிவிட்டதை தணிக்கை அதிகாரிகள் கத்தரித்துக் கொண்டதை எவருமே கவனித்ததாகத் தெரியவில்லை. முல்லைத்தீவில் இராணுவத்துக்கு ஏற்பட்ட மனச்சோர்வை மாற்றி அவர்களுக்கு உற்சாகமளிக்க வேண்டிய தேவையும் ரத்வத்தைக்கு இருந்தது. இதனால் தான் பாரிய பிரச்சாரங்களுடன் ஆனையிறவிலிருந்து இந்த நடவடிக்கையை ரத்வத்தை முடுக்கிவிட்டார். ரத்வத்தையைப் பொறுத்த வரையில் முல்லைத்தீவில் தனக்கு ஏற்பட்ட கௌரவக்குறைவை இதன் மூலம் நிவர்த்தி செய்து கொள்ள அவர் முயன்றிருக்கிறார். அவ்வளவு தான்.

## இராணுவப் பலப்பரீட்சை

யாழ்ப்பாணத்துக்கான தரைப்பாதை ஒன்றை வன்னிக்கூடாகத் திறப்பதைப் பொறுத்தவரையில் அவ்வாறான பாதை ஒன்று அமைக்கப்பட்டால் கூட அதனை இராணுவத்தினரால் தொடர்ந்தும் பாதுகாக்க முடியுமா என்பது கேள்விக்குரிய விடயம் தான். முல்லைத்தீவுத் தாக்குதலில் புலிகள் காட்டிய பலம் இந்தச் சந்தேகத்தை மேலும் நியாயப்படுத்தியிருக்கின்றது. இருந்தபோதிலும் ஆனையிறவிலிருந்து விமானப்படைகள் கடுமையாகக் குண்டு வீச்சுக்களை நடத்தி புதிய தாக்குதலை ரத்வத்தை ஆரம்பித்தார். தாங்கிகளின் உதவியுடன் இராணுவம் முன்னேறி





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பரந்தனைப் பிடித்துவிட்டதாக பலத்த பிரச்சாரம் நடத்தப்பட்ட வேளையில் முல்லைத்தீவை இராணுவம் முற்றாகக் கைவிட்டதாக ஒப்புக் கொண்டிருக்கிறது

யாழ்ப்பாணத்துக்கு தரைப்பாதையை அமைத்தால் கூட அதனை படையினரால் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ள முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ளது

முல்லைத்தீவைப் போல பல முகாம்களை இழக்கும் காலம் வராது என்பது நம்பக்கூடியதல்ல

யது. ஆனையிறவிலுள்ள படையினரின் எண்ணிக்கை இத்தாக்குதலை நடத்துவதற்குப் போதுமானதாக இல்லாததால் பெருமளவு படையினர் யாழ்ப்பாணம் உட்பட நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் கொண்டு வரப்பட்டனர். கிளிநொச்சிப் பகுதியிலிருந்து பெருந் தொகையான படையினர் இடம் பெயர்ந்துள்ளார்கள். கடுமையான ஷெல் தாக்குதல்கள் மற்றும் விமானக்குண்டு வீச்சுச் சம்பவங்களால் தமது வீடுகளை இழந்த நிலையிலேயே இவர்கள் வெளியேறியுள்ளார்கள். இவர்களில் பெருந் தொகையானவர்கள் ஏற்கனவே யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயுதப்படையினரின் தொடர்ச்சியான தாக்குதல்களால் பெருந்தொகையானவர்கள் கொல்லப்பட்டும் காயப்பட்டும் உள்ளார்கள். வடபகுதியின் அகதிகள் பிரச்னையை இத்தாக்குதல் மேலும் தீவிரமாக்கியுள்ளது.

எனினும் ஆள் - ஆயுத பலம் மட்டும் தான் ஒரு யுத்தத்தின் முடிவை நிர்ணயிப்பதாக இருக்கும் என்ற நோக்கத்துடனேயே அரசின் இராணுவப்படையெடுப்பு உபாயங்கள் வகுக்கப்படுகின்றன. கிளிநொச்சித் தாக்குதலும் இந்த அடிப்படையிலேயே முன்னெடுக்கப்படுகின்றது. ஆனால் முல்லைத்தீவுச் சமர்க்களத்தின் முடிவு கூட - ஆள் - ஆயுத பலத்தின் மூலம் யுத்தத்தின் முடிவை நிர்ணயிக்க முடியாது என்பதையே வெளிப்படுத்தியது.

இதே பாதையில் தொடர்ந்தும் செல்வது ஆபத்தானது என்பதை இனிமேலாவது சந்திரிகா அரசு உணர்ந்து கொள்ளாவிட்டால் மேலும் பல முல்லைத்தீவுகளைச் சந்திப்பது தவிர்க்கமுடியாததாகவே இருக்கும். ★


LAW OFFICE
(416) 499-6202

நாதன் சிறீதரன்
கனடிய சட்டத்தரணி

NATHAN SRITHARAN
BARRISTER & SOLICITOR
NOTARY PUBLIC

LEGAL AID CERTIFICATES ACCEPTED
FREE INITIAL CONSULTATION

2190 Warden Ave.,
(at Sheppard) Suite: 208

www.tamilarangam.net


# நம்பிக்கைக்கு லண்டனில் ஒரு தங்க மாளிகை

# RAJU PATTNI &SON

## லண்டனில் முன்னணி நகை மாளிகை

*SPECIALISE IN 22Ct. GOLD & DIAMOND JEWELLARY*

**TAX FREE FOR OVERSEAS VISITORS**

*தமிழ் மக்களின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்று*
நகை வியாபாரத்தில்முன்னணி வகிக்கும் ஒரே நிறுவனம்


RAJU PATTNI

**அழகான வண்ண வண்ண**
உத்தரவாதமுள்ள 22 கரட் தங்கத்திலான
**தாலிக் கொடிகள் நெக்கலஸ்,**
*விதம் விதமான நெக்லஸ்*
'ஓம்' பதிக்கப்பட்ட பென்ரன்கள்
தங்க வளையல்கள்
அட்டியல், சங்கிலிகள்



நகைகளின் சுரங்கம்
தங்க நகைகளின்
தரமான தெரிவு

## ராஜூ பட்னி அன் சன்

**PATTNI HOUSE, 58-60 EALING ROAD**
**WEMBLEY, MIDDX HAO 4TQ**
TEL : 081 903 6677/2859, 081 902 0577 FAX: 081 903 4887




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# யாழ். நகரில் மரண அடி

★ சத்யன்

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி விட்டோம் என மார்தட்டிக்கொண்ட ஆயுதப்படைக்கு 'மரணஅடி' விழுந்துள்ளது. கடந்த மாதம் நான்காம் திகதி யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள விடுதலைப் புலிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதல் அரசுக்கு அதிர்ச்சியை அளித்துள்ளமைக்குப் பல காரணங்கள் உண்டு. விடுதலைப் புலிகளால் ஒன்றும் செய்ய முடியாது என்று அரசு ஏற்படுத்திய மாயை உடைக்கப்பட்டுவிட்டது.

கடுமையான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் ஊடறுத்துச் சென்று அமைச்சர் ஒருவரையே தம்மால் நெருங்க முடியும் என்பதைத் தற்கொலைப் படையினர் நிரூபித்திருக்கிறார்கள். அரசாங்கத்தின் பாதுகாப்புத் தந்திரோபாயங்களில் உள்ள குறைபாடுகளையும் ஓட்டைகளையும் இச் சம்பவம் வெளிப்படுத்தியிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் ஆயுதப்படையினர் பெற்றுக்கொண்ட வெற்றி, விடுதலைப் புலிகளின் ஊடுருவலைத் தடுத்து நிறுத்துவதிலேயே இப்போது தங்கியுள்ளது என்பதை ராணுவ அதிகாரி சுட்டிக்காட்டியிருக்கின்றார். குடாநாட்டில் வாராந்தம் ராணுவத்தினருக்கு சுமார் 40 இழப்புகள் ஏற்படுவதாக மதிப்பிடப்படுபின்றது. குடாநாட்டில் ராணுவம் கைப்பற்றிய பகுதிகளின் முன்னணிப் பாதுகாப்பு அரண்களில் மட்டும் 20,000க்கும் அதிகமான ராணுவத்தினர் நிலை நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். விடுதலைப்புலிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்காகவே இவ்வளவு பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறார்கள். இதன் உடனடி விளைவு என்னவென்றால் படையினரைக் குடாநாட்டுக்குள் முடக்கி வைத்திருக்கின்ற நிலையில் மற்றொரு பகுதியில் நடவடிக்கைகள் எதிலும் ஈடுபட முடியாத நிலை நிலை அரசுக்கு ஏற்பட்டுள்ளது. வன்னிப் பகுதியில் அரசு திட்டமிட்டிருந்த சில மட்டுப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் கைவிடப்படவும் இதுவே காரணம் என பாதுகாப்புத்துறை வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

## தந்திரோபாயம் மீள்பரிசீலனை

பாதுகாப்பு முன்னணிநிலைகளில் ஆயுதப் படையினரை நிலை நிறுத்திவைத்திருக்கும் தந்திரோபாயம் சரியானதா என அண்மையில் நடைபெற்ற பாதுகாப்பு அதிகாரிகளின் உயர்மட்டக் கூட்டம் ஒன்றில் விரிவாக ஆராயப்பட்டது. கெரில்லா யுத்தம் ஒன்றை எதிர்கொள்வதற்கு இவ்வாறான தந்திரோபாயம் பலனளிக்கப்போவதில்லை என இங்கு சுட்டிக் காட்டப்பட்டது. அதேவேளையில் விடுதலைப் புலிகளின் ஊடுருவல்களைத் தடுக்க இதனை விட வேறு வழியில்லையா என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

இது தொடர்பாக ஆராயப்பட்ட ஒரு சில தினங்களிலேயே ஸ்ரான்லி வீதித் தாக்குதல் இடம்பெற்றிருக்கின்றது. முன்னணிப் பாதுகாப்பு நிலைகளைவிட வீதிக்கு வீதி, சந்திக்குச் சந்தி சோதனைச் சாவடிகளும், தடுப்பு முகாம்களும் அமைக்கப் பட்டு பொது மக்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படும் நிலையும் தொடர்கின்றது.

இவ்வாறான நிலையில் அமைச்சர் ஒருவரையே தற்கொலைப் போராளி ஒருவர் நெருங்கியிருப்பது அரசின் பாதுகாப்பு தந்திரோபாயத்தையிட்டு, மீள் பரிசீலனை செய்ய வேண்டிய தேவையை ஏற்படுத்தியிருப்பதாக ராணுவ விமர்சகர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

விடுதலைப் புலிகளின்தந்திரோபாயம் காலத்துக்குக் காலம் தேவைக்கு ஏற்ப மாறுகின்றது. இலங்கைப் படையினரிடம் மட்டுமன்றி இந்தியப் படையினரிடம் இருந்தும் பெற்றுக்

விடுதலைப் புலிகளின் தந்திரோபாயம் காலத்துக்குக் காலம் தேவைக்கு ஏற்ப மாறுபடுகின்றது. இலங்கைப் படையினரிடம் மட்டுமன்றி இந்தியப் படையினரிடம் பெற்றுக் கொண்ட அனுபவத்தின் அடிப்படையிலேயே புலிகள் இயங்கிவருகிறார்கள்

www.tamilarangam.net



கொண்ட அனுபவத்தின் அடிப்படையிலே புலிகள் தமது தந்திரோபாயங்களை வகுத்துக் கொள்கின்றார்கள்.

எவ்வாறான சந்தர்ப்பத்தில் எந்தவகை தந்திரோபாயத்தை நாம் கையாள்வோம் என்பது எமக்கே தெரியாது எனப் புலிகள் பிரதிநிதி ஒருவர் குறிப்பிட்டிருக்கின்றார். இதானால்தான் குடாநாட்டில் வாராந்தம் சராசரியாக 40படைகளைச் சந்திரிகா அரசு இழந்து வருகிறது.

இதனால் குடாநாட்டில் புலிகளின் ஊடுருவலைத் தடுப்பதற்கு புதிய தந்திரோபாயம் ஒன்றை கடைபிடிக்க வேண்டுமென சந்திரிகா அரசு விரும்புகின்ற போதிலும் அதனை எவ்வாறு வகுப்பது என்பதில் குழம்பிப் போயுள்ளது.




### முன்னைய அனுபவத்திலிருந்து புதிய தந்திரோபாயங்கள்

விடுதலைப் புலிகள் தமது பழைய அனுபங்களிலிருந்து தமமுடைய தந்திரோபாயங்களை வகுத்துக் கொள்வதுபோல அரசாங்கமும் பழைய அனுபவங்களை ஆராய்கிறது. இதன் அடிப்படையில் தமது தந்திரோபாய்ங்களை வகுத்துக் தொள்வதே அரசின் திட்டம் ஆகும்.

1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடபகுதியில் ராணுவத்தினர்மீது திடீர் தாக்குதல்கள் கன்னி வெடித் தாக்குதல்கள், என ஏனைய வகையான தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால் ஏற்பட்ட இழப்புகளின் காரணமாக ராணுவம் தனது நகர்வுகளைக் குறைத்துக் கொண்டது. இதனால் போராளிகளின் கட்டுப்பாடு விஸ்தரிக்கப்பட்டது.

அத்தியாவசியமான தேவைகளுக்காக மட்டுமே ராணுவ நகர்வுகள் இடம் பேற்ற போதிலும், 1985இன் பிற்பகுதியுடன் ராணுவம் முற்றாக முகாம்களுக்குள் முடங்கிக் கொண்டது. ராணுவக் கட்டுப்பாடு முகாம் எல்லைகளுடன் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டது.

1987இல் குடாநாட்டின் கட்டுப்பாடு முழுமையாக போராளிகளின் கைகளுக்கு வந்துவிட்டது. இழந்த நிலப் பகுதிகளைக் கைப்பற்றும் நோக்கத்துடனேயே 'ஒப்பரேஷன் லிபரேஷன்' வடமராட்சியில் நடாத்தப்பட்டது.

இதன் பின்னர் இந்தியப் படையால் 1987 பிற்பகுதியில் யாழ். குடாநாடு முழுமையாகக் கைப்பற்றப்பட்டது. இருந்த போதிலும், யாழ் குடாநாட்டுக்குள் ஊடுருவி பல தாக்குதல்களை விடுதலைப் புலிகள் நடாத்தினார்கள். முல்லைத்தீவுக்குள் புகுந்து புலிகளை அழிப்பதற்கு இந்திய ராணுவத்துக்கு முடியாமல் போனதே இதற்குக் காரணம் என ராணுவ ஆய்வாளர்கள் மதிப்பிடுகிறார்கள்.

ஆனால் இலங்கைப் படையினரைவிட பெருந்தொகை படையினரை நடவடிக்கையில் ஈடுபடுத்தக் கூடிய நிலையில் இந்தியா இருந்துள்ளது. இந்திய ராணுவத்தால் யாழ்ப்பாணத்தையும், கிளிநொச்சியையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு முல்லைத்தீவிலும் தாக்குதல் நடத்தக் கூடியதாக இருந்தது.

ஆனால் இலங்கைப் படைகளுக்கு யாழ்ப்பாணத்தை மட்டும் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டு கிளிநொச்சியில் தாக்குதல் நடாத்துவதற்கே போதிய படை இல்லை.

அதாவது இந்தியப் படையின் சக்தியை விட குறைவான சக்தியையே இலங்கைப் படை கொண்டுள்ளது. அதே வேளையில் அப்போது இருந்ததை விட மூன்று மடங்கு புலிகளின் பலம் வளர்ந்துள்ளது என ராணுவ ஆய்வாளர் ஒருவர் மதிப்பிடுகிறார்.

இதனால் இந்தியப் படையினரின் தந்திரோபாயத்தைவிட இலங்கைப் படையின் தந்திரோபாயம் வித்தியாசமானதாக இருக்க வேண்டுமெனவும் அவர் வற்புறுத்தியுள்ளார்.

### ஊடுருவுகிறார்களா? உள்ளேயுள்ளார்களா?

முன்னைய அனுபங்களின் அடிப்படையில் தாம் கைப்பற்றிய பகுதிகளில் பாரிய பாதுகாப்பு வேலி ஒன்றை ராணுவம் அமைத்திருக்கின்றது. இந்த வேலியைத்தாண்டி புலிகள் நுழைய முடியாது என்பதுதான் ராணுவத்தின் எண்ணமாக இருந்தது. இந்த வேலியைத் தாண்டி புலிகள் நுழைய முடியாது என்பதுதான் ராணுவத்தின் எண்ணமாக இருந்தது.அதனை விடச் சோதனைச்சாவடிகளில் வைத்தும் புலிகளை மடக்கிவிடலாம் என்ற எண்ணத்திலே சந்திக்குச் சந்தி சோதனைச் சாவடிகளும், தடை முகாம்களும் அமைக்கப்பட்டன.

உதாரணமாக கோப்பாயிலிருந்து ஒருவர் யாழ். நகருக்குச் செல்ல வேண்டுமானால் குறைந்தது நான்கு இடங்களிலாவது ஏறி இறங்க வேண்டும். அங்கு அவர்களது அடையாள அட்டையும் பொதிகளும் சோதனை செய்யப்படும். இந்த நிலையில் புலிகள் ஊடுருவுவது சாத்தியமாகாது என்றே படையினர் நம்பினார்கள்.

ஆனால் இதற்குப் பின்னரும் ஸ்ரான்லி வீதி உட்படப் பல இடங்களில் புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளதால் புலிகள் ஊடுருவுகிறார்களா?அல்லது உள்ளே இருக்கிறார்களா? என்ற சந்தேகம் இப்போது ராணுவத்துக்கு ஏற்பட்டுள்ளது.

யாழ்பாணத்தில் இருந்த ஒன்பது லட்சம் பேரில் நான்கு லட்சம் பேர் இப்போது திரும்பியுள்ளதாக அரசாங்க மதிப்பீடு ஒன்று தெரிவிக்கின்றது. இவர்களில் புலிகள் யார்? மக்கள் யார்? என்று அடையாளம் காண்பது ராணுவத்துக்குச் சாத்தியமில்லை.

இதனால்தான் ஸ்ரான்லி வீதிச் சம்பவத்தை தொடர்ந்து பெருந்தொகையான இளைஞர்களும் யுவதிகளும் கைது செய்யப்பட்டார்கள்.ராணுவச் சோதனைகளும் கடுமையாக்கப்பட்டன.

வெளியே இருந்து வரக்கூடிய ஊடுருவல்களைத் தடுக்க வேண்டும். உள்ளே புலிகள் உள்ளார்களா என்பதைக் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். இதற்குள் குடாநாட்டுக்குள் நிலை கொண்டுள்ள ராணுவம் போதாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேலும் பத்தாயிரம் ராணுவம் தேவை என ராணுவத் தலைமையகத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது ஒவ்வொரு பத்துப் பேருக்கும் ஒரு ராணுவச் சிப்பாய் அவசியமாம்.

ஆனால் பெருந்தொகையான ராணுவத்தைக் குடாநாட்டுக்குள் முடக்கியுள்ள ராணுவத்தால் மேலும் ராணுவத்தை அனுப்ப முடியாது. இது ராணுவத்தின் தாக்குதல் நடாத்தும் ஆற்றலை நன்கு பாதித்திருக்கிறது.

இந்த நிலையில் ராணுவப் பலத்தைப் பெருக்குவது ஒன்றுதான் அரசாங்கத்தின் தீர்வாக அமையலாம்.

**ராணுவ படைப்பலம்**
***அரசின் சிக்கல்கள்***

ஆயுதப் படையினரின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன் ஆயுதப் பலத்தைப் பெருக்குவதனூடாக தம்முடைய இலக்கை அடைய முடியும் என்பதே ராணுவத் தலைமையின் கருத்தாக இருந்தது. ஆனால் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிந்தன.

பத்தாயிரம் பேரைத் திரட்டுவதற்காக டிசம்பரில் ஒரு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் மூவாயிரம் பேர் சேவைக்கு வராமலே தப்பிவிட்டனர். மீண்டும் பத்தாயிரம் பேரைத் திரட்ட ஏப்பிரல்- மே மாதங்களில் நேர் முகப்பரீட்சைகள் நடாத்தப்பட்டன. அவையும் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை.

இதனாலே ராணுவத்தை விட்டு ஓடியோரை மீண்டும் வந்து இணையுமாறு அரசு வெகு பக்குவமாக அழைத்துள்ளது.

இவ்வாறு வெளியேறிய சுமார் இருபத்து ஐயாயிரம் பேர் தலை மறைவாக இருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளன.

எனினும் அரசின் அழைப்பை ஏற்று புதிதாக எவரும் இணைந்து கொள்வதாகத் தெரியவில்லை.

இதனால்ராணுவத்துக்குத்தேவை யான ஆட்களை அரசால் பெற்றுக் கொள்வது மிகவும் கஷ்டமாக உள்ளது.

இரண்டாவதாக,

நிதிப் பிரச்னை ஒன்றையும் அரசு எதிர் நோக்கியுள்ளது.

இவ்வருடத்துப் பாதுகாப்புச் செலவாக 3,800 கோடி ரூபா வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இது முன்னைய வருடங்களை விட மிகவும் அதிகமானதாகும்.

ஆனால் யாழ்ப்பாணத் தாக்குதலை நடாத்துவதற்காக பெருந் தொகையான ஆயுதங்களும், விமானங்கள், ஹெலிக் கொப்டர்கள்- கப்பல்கள்- கவச வாகனங்கள் போன்றவை கொள்வனவு செய்யப்பட்டன.

இதனால் இவ்வருடம் முதல் ஆறு மாத காலத்திலேயே பாதுகாப்புச் செலவீனம் 4,800 கோடியைத் தாண்டிவிட்டது. இத் தொகை இவ்வருட இறதியில் 5,000 கோடியைத் தாண்டிவிடும் என மதிப்பிடப்படுகின்றது. இதனால் 1,200கோடியை மேலதிகமாக ஒதுக்கீடு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

நாடு இன்றுள்ள நிலையில் இது ஒருபாரிய நிதிப்பிரச்னையை ஏற்படுத்தியுள்ளது.

வரவு-செலவுத் திட்டத்தில் பாரியதொகை துண்டு விழவுள்ளது. மின் வெட்டு இந் நிலையை மேலும் மோசமாக்கியுள்ளது. இதுவும் யுத்தத்தைத் தொடர்வதில் அரசுக்கு பெரும் சிக்கலைத் தோற்றுவித்துள்ளது.

யாழ்ப்பாணத்தை வெற்றி கொண்டுவிட்டதாக அரசு கும்மாளம் போட்டது. ஆனால்,

யாழ்ப்பாண வெற்றி அரசின் குறுகிய கால பிரச்சார வெற்றிகளைக் கொடுத்திருக்கலாம். ஆனால் நீண்ட கால நோக்கில் வியட்னாமில் கால் பதித்த அமெரிக்காவின் நிலைதான்!0


**PARAM & CO**
**SOLICITORS**

**Solicitors for all your legal requirements**

**● Legal Aid cases undertaken**

**S. PARAMALINGAM** BA, LLM
***Assistant Solicitors:*** **Miss R.D. Kulasegaram &** *T.Thanarajasingam*

**PARAM & CO SOLICITORS**
***SEGARAM HOUSE, 221 EDGWARE ROAD, COLINDALE, LONDON NW9 6LP***
**Tel: 081-200 3500 Fax: 081-200 1360**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஈழத்துமேதை சுந்தரின் பேசும் சித்திரங்கள்






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# தடுமாறும் 'எல்லைகள்'

★ அபிமன்யூ

இராணுவத்தைப் போலவே ஊர்க் காவல் படையினரது முக்கியத்துவமும் இப்போது அதிகரித்து வருகின்றது. எல்லைப் பகுதிகளிலுள்ள சிங்கள மக்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் அதிகரித்து வரும் நிலையில், ஊர்காவல் படையினருக்கான பயிற்சி மற்றும் அவற்றுக்கு வழங்கப்படும் ஆயுதங்களில் முன்னேற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

புலிகளின் தாக்குதல் தொடர்பான அச்சம் எல்லைப் புறக்கிராமங்களில் அதிகரித்துள்ள அதேவேளையில் அடுத்த தாக்குதல் எங்கே நடக்கலாம் என்பதற்கு பதில் காணமுடியாதவாறு மக்கள் 'கிலி'யடைந்துள்ளார்கள். காட்டுப் பகுதிகள் அனைத்தும் புலிகள் ஊடுருவியுள்ள நிலையில் ஊர்காவல் படையினரது அச்சங்களும் அதிகரித்துள்ளன.

புலிகள் பற்றிய அச்சம் வெலிக்கந்தையில் தான் அதிகமாகவுள்ளது. கிராமத்தில் இரவு வேளைகளில் புலிகளின் நடமாட்டம் அதிகமுள்ளது. பகல் வேளைகளில் இவர்கள் அடர்ந்த காடுகளுக்குள் சென்று விடுவதாக கிராமவாசிகள் கூறுகின்றார்கள்.

இது தொடர்பான நிலைமைகளை நேரில் பார்த்து தகவல் அறிந்து வருவதற்காக பத்திரிகையாளர் குழு ஒன்று அண்மையில் வெலிகந்தைக்குச் சென்றிருந்தது.

பௌத்த பிக்கு ஒருவர்தான் இப்பகுதி மக்களுக்கு தலைவர் போலச் செயற்படுகின்றார். தமது சொந்த மக்களிடமிருந்தே ஊர்காவல் படையினரை இவர்கள் தெரிவு செய்துள்ளார்கள். இதன்படி ஒவ்வொரு 25 பேருக்கும் ஒருவர் ஊர்காவல்படையாக இருக்கின்றனர். இரவு நேரங்களில் புலிகளின் வருகையை எதிர்பார்த்து பங்கர்களுக்குள் விழித்திருக்கும் இவர்களுக்கு பெருமளவுக்கு 'ஷொட்கன்'களே வழங்கப்பட்டுள்ளன. எனினும் இப்போது பல்வேறு கோரிக்கைகளையடுத்து தன்னியக்கத் துப்பாக்கிகளும்

**புலிகளின் தாக்குதல் தொடர்பான அச்சம் எல்லைப்புறக்கிராமங்களில் அதிகரித்துள்ளது**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





பாடசாலை போகும் மாணவர்களுக்கும் பாதுகாப்பு

வழங்கப்பட்டுள்ளன.

சுமார் 400 குடும்பங்களைக் கொண்டுள்ள பலட்டியால என்ற கிராமத்தில் ஊர்காவல் படையிலுள்ள சுனில் கமகே என்பவரையும் பத்திரிகையாளர்கள் பேட்டி கண்டார்கள். தமது உறவினர்களினதும் அயலார்களினதும் உயிரைப் பாதுகாக்கவே ஊர்காவல் படையில் தான் சேர்ந்து கொண்டதாக அவர் குறிப்பிட்டார்.

ஆனால் அவரைப் பொறுத்தவரையில் இது அவருக்கு ஒரு முழுநேர வேலையல்ல பகுதி நேர வேலை தான். பகலில் ஒரு விவசாயியாக அவர் தனது தோட்டத்தில் கடமையாற்றுகிறார். இரவில் தான் சீருடைகளை அணிந்து துப்பாக்கியையும் தூக்கிக் கொண்டு ஊர்காவல்படையாக மாறுகிறார்.

அவர் மட்டுமல்ல வேறு பல ஊர்காவல் படையினர் கூட பகலில் வேறு தொழில் செய்பவர்களாகவே இருக்கின்றனர். பகலில் அவர்களுக்கு ஊர்காவல் படையில் வேலையில்லை என்பது மட்டும் அதற்குக் காரணமல்ல. படையில் அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளமும் தான் இதற்குக் காரணம்.

இந்தளவுக்கு ஊர்காவல்கள் போட்டும் கூட மக்களுடைய அச்சத்தை அரசாங்கத்தால் போக்க முடியவில்லை. எல்லைக்கிராமங்கள் அனைத்திலுமே ஊர்காவல்படைகள் அமைக்கப்பட்டுள்ளன. இராணுவக் காவல் அரண்கள், பொலிஸ் காவல் அரண்களும் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இருந்தபோதிலும் இரவு சூரியன் மறைந்து விடுவதற்கு முன்னதாகவே தமது இரவு உணவை முடித்துக் கொண்டு கிராமவாசிகள் உறங்கச் சென்று விடுகின்றார்கள். இரவு நேரப் போக்குவரத்துக்களும் முழுமையாகவே ஸ்தம்பிதமடைந்துள்ளன.

எல்லைப்புறக் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்ட பயிற்சித் திட்டங்களும் பெருமளவுக்குக் கைவிடப்பட்ட நிலையில் உள்ளன. விவசாயம் மற்றும் நெற்செய்கை போன்றவற்றில் ஈடுபடுவதற்கு சிங்கள மக்களிடைய அச்சம் நிலவுகிறது.

இந்த நிலையில் எல்லைப்புற சிங்கள மக்களின் நலன்களை அரசு கவனிக்கத் தவறிவிட்டது. போதியபாதுகாப்பு வழங்கத் தவறிவிட்டது எனக் குற்றஞ்சாட்டி பௌத்த பிக்கு ஒருவர் வெலிக்கந்தையில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தினார். ஆனால் இதனால் எந்தவித பலனும் அளிக்கப்படவில்லை.

பெருந்தொகையான ஊர்காவல் படையினரை உருவாக்கி அவர்களை ஆயுதமயப்படுத்துவது ஒன்றைத் தான் அரசாங்கத்தால் இன்று செய்யக்கூடியதாகவுள்ளது. இதனால் வகைதொகையின்றிக் குவியும் ஆயுதங்கள் சொந்தப் பிரச்னைகளுக்குப் பயன்படுத்தப்படத் தொடங்கியுள்ளன. ★

வர்த்தகர்கள் மிகக்குறைந்த விலையில் அமெரிக்கன் அரிசி பெற்றுக்கொள்ளலாம்

அபிராம் நிக்கோ பலஸ்

Lange Wende 53 B, Neheim,
59755 Arnsberg 1

Tel: 02932/82712
Fax: 02932/25312

ADAC, ARBEITSAMT க்கு நேர் முன்னால்

அதிபர்:
எஸ். செல்வராஜா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# அரசியல் சதுரங்கம்!

**ஐ.தே.க.வுக்கு எதிரான விசாரணைக்குழுக்களையே தனது அரசியலுக்கு நம்பியிருக்கும் பொதுஜனமுன்னணி**

○ அபிமன்யூ

விடுதலைப் புலிகளுக்கு பிரேமதாஸ காலத்தில் ஆயுதங்கள் வழங்கப்பட்டவையா என்பதையிட்டு தனக்கு எதுவுமே தெரியாது என ஐ.தே.க. வின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துவிட்டார். கொப்பேகடுவ படுகொலை தொடர்பான விசாரணைகளை நடாத்தி வரும் ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக இந்த ஆயுதக்கையளிப்பு தொடர்பான தகவல்களே இப்போது பரபரப்பாக வெளியிடப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே இதனையிட்டுத் தனக்கு எதுவுமே தெரியாது என ரணில் கூறியிருக்கின்றார்.

கொப்பேகடுவ ஆணைக்குழு முன்பாக வெளியாகிவரும் இந்தத் தகவல்கள் ஐ.தே.க. வுக்குப் பெருஞ் சங்டகத்தைக் கொடுத்துள்ளது. பாராளுமன்றத்தில் இடம் பெற்ற சந்திப்பொன்றின்போது ஐ.தே.க. உறுப்பினரான காமினி லொக்குகே எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும்போதே ரணில் தனக்கு எதுவும் தெரியாதெனத் தலையாட்டியிருக்கின்றார்.

**பிரேமதாசா புலிகளுக்கு ஆயுதம் கொடுத்த விவகாரம் தனக்கு முன்னர் தெரியாது என்று ஒதுங்கப்பார்க்கிறாற் ரணில்**

ஆனால் காமினி லொக்குகே இது தொடர்பான மேலதிக தகவல்கள் சிலவற்றையும் ரணிலுக்குக் கூறியிருக்கின்றார். இந்த கையளிப்பால் ஏற்படக்கூடிய தாக்கங்களையிட்டு அப்போதைய பாதுகாப்புச் செயலாளர் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார் என்பதே லொக்குகேயின் முதலாவது தகவல். இதனை விட அப்போதைய மூன்று அமைச்சர்களும் இதனையிட்டு அறிந்திருந்தனர் எனவும் லொக்குகே கூறினார்.

இந்தச் சந்தியில் கலந்து கொண்ட மற்றொரு ஐ.தே.க. எம்.பி.யான பிரேமரட்ண குணசேகரா மேலதிக தகவல் ஒன்றைத் தெரிவித்தார். 'பிரேமதாச காலத்து தகவல் ஒன்றைத் தெரிவித்தார். ''பிரேமதாச காலத்து அமைச்சரான காமினி ஜெயவிக்கிரம பெரேரா இந்த

www.tamilarangam.net



ஆயுதக்கையளிப்பை பாராளுமன்றத்தில் ஏற்றுக் கொண்டிருப்பதுடன் இவை இந்திய இராணுவத்துடன் சண்டையிடவே வழங்கப் பட்டதாகவும் குறிப்பிட்டிருந்தார்'' என பிரேமரட்ண குணசேகரா சுட்டிக் காட்டினார்.

இதற்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க இவ்வாறான சம்பவம் ஒன்றையிட்டுத் தனக்கு எதுவுமே தெரியாது'' என்றார். விடுதலைப் புலிகளுக்கு ஆயுதம் வழங்குவது என அரசாங்கம் முடிவெடுத்தால் அதையிட்டு அமைச்சரவைக்கு அறிவிப்பது அவசியம். ஆனால் எந்த ஒரு கட்டத்திலும் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட இந்த முடிவு அமைச்சவைக்குத் தெரிவிக்கப்படவில்லை.'' சபையின் தலைவர் என்ற முறையில் இது பற்றிய விளக்கத்தை ஜனாதிபதி பிரேமதாசாவிடம் கேட்டபோது, அவ்வாறான சம்பவங்கள் எதுவும் இடம் பெறவில்லை என்ற பதிலே தமக்குக் கிடைத்தது எனவும் ரணில் குறிப்பிட்டார். காமனி ஜெயவிக்கிரம பெரேரா எந்த அடிப்படையில் இந்தத் தகவல்களை வெளியிட்டார் என்பதையிட்டு தான் கேள்வி எழுப்பப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

கொப்பேகடுவபடுகொலை தொடர்பாக விசாரணை நடத்துவதற்கென நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு, அதனடன் சம்பந்தமில்லாத ஆயுதக்கையளிப்பு தொடர்பாகவே தனது விசாரணைகளை இப்போது மேற்கொண்டு வருகின்றது. ஐ.தே.க. வினரை தாக்குவதே இதன் அடிப்படை நோக்கம். ஐ.தே.க.வுக்கு இது பெருஞ் சங்கடத்தைக் கொடுத்துள்ளது. இதற்குப் பழிவாங்கும் முகமாக அரசாங்கத்தின் நடவடிக்கைகள் எதற்கும் ஆதரவளிப்பதில்லை என்ற நிலைப்பாட்டை ஐ.தே.க. எடுத்திருக்கின்றது.

பொ.ஜ.மு. அரசுக்கும் மக்களைக் கவர கவர்ச்சிகரமான திட்டங்கள் எதுவும் இல்லாததால், ஆணைக்குழுக்களையே நம்பியிருக்க வேண்டியுள்ளது.

தாயாருக்கும் மகளுக்கும் இடையேயான மோதல்கள் தணிந்துள்ளது போலத் தென்பட்டாலும் உள்ளே புகைந்து கொண்டு தான் இருக்கின்றது. சந்தர்ப்பம் கிடைக்கும்போது இருவரும் ஒருவரை ஒருவர் தாக்கத் தவறுவதில்லை. உண்மையில் இருவரும் இதற்கான ஒரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றார்கள் போலத் தான் உள்ளது.



# தாய்க்கும் மகளுக்கும் மோதல் வலுக்கிறது



தாயார் இப்பொழுது 80 வயதைத் தாண்டிவிட்ட போதிலும் அரசாங்க விவகாரங்களில் தனக்குள்ள அக்கறையை விட்டு விட அவர் தயாராகவில்லை. உண்மையில் தன்னுடைய அன்றாட முயற்சிகளை சிரமமாக மேற்கொண்டு ஏனையவர்களுக்கு ஒரு உதாரணமாக இருக்கவே அவர் விரும்புகிறார். இந்த நிலையில், 60 வயதுடன் அரசியல்வாதிகள் ஓய்வுபெற்று விட வேண்டும் என மகள் பொதுவைபவம் ஒன்றில் குறிப்பிட்டிருக்கின்றார். மகள் எதனைக் குறிப்பிடுகின்றார் என்பது தாயாருக்குத் தெரியாததல்ல. இதனை ஒரேயடியாக நிராகரித்து விட்ட அவர்,தன்னுடைய உடல்நிலை இடமளிக்கும் வரையில் அரசியலிலிருந்து தான் ஒதுங்கப் போவதில்லை எனக் கூறி விட்டார்.

தாயாரது காலத்து அரசியல் வாதிகளில் ஒருவரான முன்னாள் சபாநாயகர் எம்.எச்.முகம்மது கூட அரசியலிலிருந்து ஒதுங்க விரும்பாத ஒரு வயது போன அரசியல்வாதியாதலால் - அவர் தன்னுடைய 75 வது பிறந்த தினத்தை கடந்த மாதம் கோலகலமாகக் கொண்டாடினார். இந்தப் பிறந்ததின வைபவத்தில் கலந்து கொண்டு அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா வயதைப் பற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடுமாறு முகமதுவை வாழ்த்தினார். அறுபது வயதுடன் அரசியலிலிருந்து ஓய்வு பெறவேண்டும் என்ற அழைப்பை தானும் நிராகரித்து விட்டதாக சேனநாயக்கா சுட்டிக்காட்டினார்.

சேனநாயக்காவின் இந்த உரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீதான ஒரு தாக்குதலாகவே அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

தகவல்துறை அமைச்சர் பொறுப்பிலிருந்து சேனநாயக்காவை மாற்றுவதற்கு ஜனாதிபதி திட்டமிட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படும் நிலையிலேயே அமைச்சர் சேனநாயக்கா இதனைக் கூறியுள்ளார்.

ஆளும் கட்சியில் ஜனாதிபதிக்கு எதிரான அணியினர் - அதாவது பிரதமர் சிறிமாவோ அம்மையாருடன் உள்ளவர்கள் பெருமளவுக்கு 60 வயதைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





தாண்டியவர்களாகவே உள்ளனர். இதனால் தான் அரசியல்வாதிகளின் வயதைப் பற்றி ஜனாதிபதி கவலைப்படவேண்யிருக்கின்றது.

ஜனாதிபதி இப்போது ஆளுங்கட்சிக்குள் இரண்டு தரப்புக்களிலிருந்து எதிர்ப்புக்களைச் சமாளிக்க வேண்டியவராக இருக்கின்றார். முதலாவது தாயாருக்கு ஆதரவானவர்களின் எதிர்ப்பு. இரண்டாவது 'மல்பரி குழு' என அழைக்கப்படும் பின்வரிசை உறுப்பினர்களின் எதிர்ப்பு.

இவற்றைச் சமாளிக்க தன்னாலியன்ற அனைத்து தந்திரோபாயங்களையும் பிரயோகித்துக் களைத்துப் போய்விட்டார்.

யாழ்ப்பாணத்தை ஆயுதப்படைகள் கைப்பற்றியதைத் தொடர்ந்து அதீதமாக வளர்ச்சியடைந்த பாதுகாப்பு பிரதியமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையின் செல்வாக்கு இப்போது வீழ்ச்சியடைந்து வருவதாகப் பல்வேறு மதிப்பீடுகளும் தெரிவிக்கின்றன.

ரத்வத்தை மறுமணம் செய்து கொண்ட அதே தினத்தில் ஆரம்பமான மின்சாரசபை ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டமே அவருடைய ஆதரவு வீழ்ச்சியடைய பிரதான காரணமாக அமைந்துவிட்டது.

அதேவேளையில் நாடு முழுவதும் தொடர்ச்சியாக அமுல் செய்யப்படும் மின் வெட்டும் கூட அவருடைய 'இமேஜ்' ஜைப் பாதித்திருக்கின்றது.

ரத்வத்தை பாதுகாப்பு பிரதி அமைச்சர் பொறுப்பை தன்னிடம் வைத்திருக்கின்ற அதேவேளையில் மின்சக்தி அமைச்சுப் பொறுப்பும் அவரிடமே உள்ளது.

பாதுகாப்புப் பணியில் அவர் தனது முழுக்கவனத்தையும் செலுத்தும் அதேவேளையில் மின்சக்தி அமைச்சை அவரிடமிருந்து மீளப்பெற்றுக் கொள்ளவேண்டும் என்ற கோரிக்கையும் இப்போது முன் வைக்கப்பட்டுள்ளது.

மின்சாரசபை ஊழியர்களின் வேலை நிறுத்தத்தின் போது அவர் நடந்து கொண்ட முறை கூட இந்தக் கோரிக்கைக்கு மேலும் வலுச்சேர்ப்பதாகவே அமைந்திருக்கின்றது.

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் என்ற வகையில் அமைச்சர் பெற்றுக்கொண்ட செல்வாக்கை மின்சக்தி அமைச்சர் என்ற முறையில் அவர் இழந்துவிட்டார்.

வெகு விரைவில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொள்ளவுள்ள அமைச்சரரவை மாற்றத்தின் போது மின்சக்தி அமைச்சு அவரிடமிருந்து எடுக்கப்படலாம் என கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகின்றது.

ஆனாலும் இதில் ஒரு சிக்கல் உள்ளது. மின்சக்தி அமைச்சு மூலமாகவே ரத்வத்தை இப்போது 'கபினட்' அந்தஸ்தைப் பெற்றிருக்கின்றார். பாதுகாப்பு 'பிரதி' அமைச்சே அவரிடமுள்ளதால் அது 'கபினட்' அந்தஸ்து இல்லாததாகும். பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடமே தொடர்ந்தும் உள்ளது.

இதனால் மின்சக்தி அமைச்சு இவரிடமிருந்து பெறப்படும் அதேவேளையில் முக்கியத்துவமற்ற வேறு அமைச்சுப் பொறுப்பொன்று அவருக்கு வழங்கப்படலாம்.

இதேவேளையில் தனது புதிய மனைவியையும் மேடைகளில் அறிமுகப்படுத்தி வைப்பதற்கு ரத்வத்தை இப்போது விரும்புகிறார் போலத் தெரிகின்றது.

அண்மையில் நடைபெற்ற பொதுமக்கள் சந்திப்பு ஒன்றில் ரத்வத்தையுடன் அவருடைய மனைவியும் மேடையில் காணப்பட்டார். அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற பரிசு வழங்கல் நிகழ்ச்சியில் திருமதி ரத்வத்தை தான் மாணவ - மாணவிகளுக்கு பரிசில்களை வழங்கினார்.

பொது நிகழ்ச்சிகளில் ரத்வத்தை கலந்து கொள்வது மிகவும் குறைவு. எப்போதாவது ஏதாவது ஒரு நிகழ்ச்சியில் மட்டுமே அவர் கலந்து கொள்வார். அவ்வாறான நிகழ்ச்சிகளுக்குக் கூட தனது மனைவியுடன் அவர் வரத் தொடங்கியுள்ளது மனைவியின் அதிஷ்டத்தில் அவர் வைத்துள்ள நம்பிக்கையின் வெளிப்பாடு தான்.

அவருடைய அரசியல் கனவுகளுக்கு புதிய மனைவி எவ்வாறு உதவப்போகின்றார் என்பதைத் பொறுத்திருந்து பார்ப்போம். ★

# கிழடுகளை ஓரங்கட்ட சந்திரிகா முயற்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# YOUR FREE MORTGAGE HEALTH CHECK

***Are you paying too much on your mortgage?***

Normally, most people will never think about reviewing their mortgage unless they move house. However sticking with your current lender can often mean that you are losing out on lower mortgage payments or a range of immediate cash benefits.

**Mortgage Health Check**

By taking part in a **free Mortgage Health Check** we can review your current home loan against many different options which include; various interest rate discounts and generous cashbacks and help you save money on your current mortgage payments.

If you are interested in finding out how you can save on your mortgage payments, please contact us and ask for a free no obligation **Mortgage Health Check**.

INDEPENDENT FINANCIAL ADVISER

# P.Srinivasan

PIA
Personal • Investment • Authority

# ARM Associates

# 0181-763 2221

**P.S. New Mortgage in the market**

**The "Personal Choice" Mortgage**

**Automatic Further Advances, Payment Holidays(no future arrears problem), Chequebook facilities(for School Fees purpose or Emergency Use), Reduce the capital at any time & withdraw at any time(saving on interest charges). - For more details, please contact us.**

*REGULATED BY THE PERSONAL INVESTMENT AUTHORITY FOR INVESTMENT BUSINESS ONLY*
*YOUR HOME IS AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOAN SECURED ON IT*




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெருமை



வானம் கறுத்தது.
மேகங்கள் அலைமோதின. குளிர் தாங்கமுடியவில்லை.
எந்த நேரத்திலும் மழை பொழியலாம்.
நிலம் தயாராய் காத்திருந்து. நிலம் அகம் மலர்ந்தது.
நீண்ட நாட்களாக சூரிய வெப்பத்தால் சூடேறிய பூமி,
தன்னை குளிப்பாட்டிக் கொள்ள தயாராய் இருந்தத.
கூதல் கண்டு ; ஊடல் உண்டு
மழையே பெய்
எவ்வளவு நாட்களாக காத்திருந்தேன். என்
மேனியெல்லாம் வெடித்துப் போயின.
வானத்தின் முகம் சுருங்கியது. மேகம் அடம் பிடித்தது.
நீரைக் கொட்டுவதற்கு வானமும் மேகமும் தயாராய்
இல்லை.
வானம் உரக்கச் சிரித்தது.
வேண்டாம் வானமே. மலர்ச்சி என்பதை நான் மறந்தே
விட்டேன்.
ஏற்றுக்கொள் . இப்போதாவது என் பெருமையை
உணர்ந்தாயா? நானின்றி நீ இல்லை; என்
பெருமையில்லை.
வானம் ஏளனமாகவும் எகத்தாளமாகவும் சிரித்தது.
இடியே சிரிப்பாகவும் சிரிப்பே இடியாகவும் இருந்தது.
நிலம் சினந்தது. மழையே நீ சொல்வது உண்மை. நான்
சிறியவன் தான் . ஆனால் நானின்றி நீ இல்லை. உன்
பெருமை இல்லை. என் விளைச்சலால் தான் நீ
பெருமையடைகின்றாய்.
உன்னால் நான் மலர்கிறேன்; விளைகிறேன். என்
மலர்ச்சியால் உன் பெருமை சிறக்கிறது. உன்னைச்
சார்ந்து நானும் என்னைச் சார்ந்து நீயுமாய்
வாழ்கிறோம்.
இல்லை... இல்லவே இல்லை. நான் தனித்தவன்.
தனிப்பெரும் பெருமையுடையவன்.
நிலமே ...நானின்றி நீ விளையமாட்டாய். என்
ஆற்றலால் தான் உலகம் வாழ்கிறது. உலகின் முக்கால்
பங்கினை நானே ஆள்கிறேன்.
அனைத்தும் நானே
நிலம் அதிர்ந்தது. முட்டாளே நீ பலவீனமானவன்.
சிறு காற்றுக்கும் எளிய குளிர்ச்சிக்கும் நடுங்கிப்
போவாய் உனக்கென்ற தனித்த ஆற்றல் ஏது?
நீ என்னாலேயே பெருமையடைகின்றாய்.
பலத்த காற்று வீசியது. மேகம் கசிந்தது . மதை
பொழிந்தது. வானம் அழுதது.
நிலம் சிரித்தது.
துப்பாக்கியோடு இரு வீரர்கள் வடக்கை நோக்கி
ஓடுகின்றார்கள்.

-சி. அருணாசலம், பகாவ், மலேசியா.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# மூடும் இரும்புத்திரை!

○ சு. அசோகன்

கடந்த யூன் 4 ஆம் திகதி ஹொங் கொங் நகரின் விக்டோரியா பூங் காவில் இருப த்தையாயிரம் மக் கள் கூடி ஏழு ஆண்டுகளுக்கு முன் சீனாவின் தியமன் சதுக்கத்தில் கம்யூனிச ஆட்சிக்கு எதிராக போராடி உயிர் துறந்த நூற்றுக்கும் அதிகமானவர்களுக்கு நினை வாஞ்சலி செலுத்தினர். கண்களில் கண்ணீருடன் இறந்தவர்களின் புகழ் பாடும் பாடல்களை பாடிய வண்ணம் இவர்கள் இந்தக் கூட்டத்தை நடத்தினர். ஜனநாயகத்திற்காக ஓங்கிக் குரல் கொடுத்து உயிர் துறந்த தம் தோழர்களை நினைவு கொள்வது மட்டுமல்லாமல் எதிர்கால இளஞ்சமுதாயத்திற்கு ஜனநாயகம் பறிய அறிவை தரவேண்டும் என்பதும் இவர்களின் குறிக்கோளாக இருந்தது.

எதிர்வரும் ஆண்டு ஜுலை 1 ஆம் திகதியுடன் தற்சமயம் பிரித்தானி யாவின் ஆட்சியின் கீழ் இருக்கும் ஹொங்கொங் சீனாவிடம் கைமாறிவிடும் என்பதால் சீனாவுக்கு எதிராக இத்தகைய நினைவுக் கூட்டங்கள் நடத்துவது என்பது ஓர் துணிகர செயலாகவே கொள்ள வேண்டும். சீனாவிற்காக ஹொங்கொங் இன் நடவடிக்கைக கவனித்து வரும் ஓர் அதிகாரி தேசிய பாதுகாப்புக்கு குந்தகம் விளைவிக்க கூடிய எந்த ஓர் ஆர்ப்பாட்டத்தையும் சீனா அனுமதிக்காது என கூறினார். ஆனால் எதிர்காலத்தில் தினமன் சதுக்கத்தில் நடந்த கொலைகளை நினைவு கொள்ள ஹொங்கொங் மக்களுக்கு அனுமதி யுண்டு, இனிமேல் வரையப்படப் போகும் உள்ளூர் சட்டவிதிகள் அனுமதித்தால் மட்டுமே என்றும் அவர் கருத்துத் தெரிவித்தார்.

**சீனாவின் பிடிக்குள் வர இருக்கும் ஹொங்ஹொங் மக்களுக்கு இப்போதே பயம் பீடிக்கத்தொடங்கியிருக்கிறது.**

சீனாவை நினைத்தால் எங்களுக்கு பயமாக உள்ளது என்று ஓர் ஆர்ப்பாட்டக்காரர் கவலையுடன் கூறினார். இந்தப் பயமும் கவலையும் ஹொங்கொங்கில் வசிக்கும் அனைவரிடமும் பரவி வருகின்றது. அண்மையில் எடுக்கப்பட்ட ஓர் புள்ளிவிபரத்தின் படி புள்ளிவிப ரத்தில் கலந்து கொண்ட 55 % மானோர் அடுத்த வருடம் ஜுன் 4 ஆம் திகதி நினைவுக் கூட்டத்தில் தாங்கள் கலந்து கொள்ளப் போவதில்லை என கூறினர். அத்தகைய கூட்டங்களில் கலந்த கொண்டால் சீன அரசினால் தாங்கள் குறி வைக்கப்படுவோம் என இவர்கள் அஞ்சுகின்றனர். ஓர் நல்லதொழிலா அல்லது உரிமைப் போராட்டமா என்று நிலை வந்தால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஹொங்கொங் மக்கள் சீன மக்களின் ஆட்சிக்கு அடங்கிப் போய்விடுவார்கள் என்றே நம்பப்படுகிறது

அநேகமான இளைஞர்கள் நல்ல தொழிலையே தேர்ந்தெடுப்பர் என்று 23 வயது நிரம்பிய ஓர் மாணவர் கருத்துத் தெரிவித்தார்.


எது வந்தாலும் சரி ஜனநாயகத்திற்கு சார்பான தங்கள் போராட்டத்தை விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்ற நிலைப்பாட்டுடனும் பலர் இருக்கின்றனர். இதுவரை காலமும் சீன அரசிற்கு எதிராக கருத்து வேறுபாடுகள் கொண்டவர்கள் சீன அரசின் தண்டனைகளிலிருந்து தப்பி ரகசியமாக ஹொங்கொங் ற்குள் நுழைந்து அங்கு வாழ்ந்து வந்தனர். இப்படி சீனாவிலிருந்து தப்பி வந்த நாற்பதுக்கும் மேற்பட்டோர் சீனாவின் ஆட்சியின் கீழ தமக்கு ஆபத்து ஏற்படும் என்று கருதி பயம் கொண்டு வெளிநாடுகளில் தஞ்சம் கோரியுள்ளனர்.

சீனாவிலிருந்து அகதிகளாக தப்பி வந்தவர்களினால் ஹொங்கொங் கட்டியெழுப்பப்பட்டாலும் அவர்கள் தங்கள் நாட்டுப் பற்றை இழந்துவிடவில்லை. அண்மையில் வெளியான ஓர் புள்ளிவிபரப்படி அதிகமானோர் சீனாவில் ஜனநாயகத்தையும் பொருளாதாரத்தையும் கட்டியெழுப்ப ஹொங்கொங் உதவிபுரிய வேண்டும் என கூறினர். ஏனெனில் சீன மக்களின் எதிர்காலத்திற்காகவே தாங்கள் போராடுவதாக அவர்கள் கூறினர். சீனா ஹொங்கொங்கில் சில வேளைகளில் ஜனநாயகத்தை ஏற்றுக்கொள்ளலாம் ஆனால் அது சீனாவிற்கு ஏற்றுமதியாவதை அனுமதிக்காது. இதனை முன் மாதிரியாக கொண்டு சீனாவின் பல பாகங்களிலும் ஜன்நாயகத்திற்கு சார்பாக குரல்கள் எழாதவரை சீனா ஹொங்கொங்கில் ஜனநாயகத்தை அனுமதிக்கலாம். போராட்டங்களும் ஆர்ப்பாட்டங்களும் ஹொங்கொங் மக்களுக்கு கஷ்டத்தையே வரவழைக்கும். அக்கஷ்டம் மீண்டும் அவர்களை அகதிகளாக மாற்றக்கூடும். இதனை யாரும் விரும்பமாட்டார்கள். எனவே ஹொங்கொங் மக்கள் சீன ஆட்சிக்கு அடங்கிப் போய் விடுவார்கள் என்றே தோன்றுகின்றது. ★

ENGINE TEC MOTORS

WE OFFER FACILITIES FOR:

- SERVICING
- CLUTCHES
- CAR ELECTRICS
- OVERHAULS
- ALL TYPES OF REPAIRS
- PRE MOT CHECKS



ASK FOR VEL OR RAJAN
TEL:081-640 1230

MOBILE: 0860 770945 / 0860 226476

339C LONDON ROAD, MITCHAM,
SURREY CR 4 4BE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# Rama & Company

*INDEPENDENT FINANCIAL ADVISERS*

Regulated by the Personal Investment Authority

INDEPENDENT FINANCIAL ADVISER

Rama

PIA
Personal Investment Authority

**3 THE ORCHARD**
**WICKFORD**
**ESSEX SS12 0HB**
**ENGLAND**

**Tel: (01268) 766624**
**Mobile:0956 369 557**
**Fax: (01268) 561805**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net









# பந்தாடப்படும் காடைத்தனம்!

சுவிஸிலிருந்து
ஏ.ஜே. ஞானேந்திரன்

அமர்க்களப்பட்டு 'ஆடி ஓய்ந்து' போயிருக்கின்றது இங்கிலாந்து. 1996 ஆம் ஆண்டுக்கான 'EURO 96' உதைபந்தாட்டப் போட்டிகளைப் பற்றியே சொல்ல வருகிறோம். 194 நாடுகள் ஒளிபரப்பும் உரிமையை வாங்கியிருந்தார்கள். உலகக் கிண்ண ஒலிம்பிக் விளையாட்டுக்களின் பின்பு மிகப் பிரமாண்டமான அளவில் பூமியில் நடாத்தப்படும் விளையாட்டு நிகழ்ச்சி என்பதை யூறோ 96 சந்தேகத்திற்கு இடமின்றி பறைசாற்றி இருக்கின்றது. 1966 ஆம் ஆண்டு உலகக் கிண்ண நிகழ்ச்சிகளை அரங்கேற்றி முடித்த இங்கிலாந்து 30 வருட இடைவெளியின் பின்பு இராட்சத அளவில் மீண்டும் ஒரு நிகழ்ச்சியை நடாத்தி இருக்கின்றது.

இங்கிலாந்தை அச்சுறுத்தியது உதைபந்தாட்டத் திடல்களில் இடம் பெறும் காடைத்தனங்கள் தாம். 1980 களின் ஆரம்பத்தில் முளைவிட்ட காடைத்தனங்கள் இங்கிலாந்தின் காற்பந்தாட்ட விளையாட்டுக்கு பெரும் மாசு ஏற்படுத்த ஆரம்பித்தன. 'SKIN HEADS' என்று அழைக்கப்பட்ட காடையர்கள் விளையாட்டு மைதானங்களை படுமோசமான நிலைக்குக் கொணர, கௌரவமான ரசிகர்கள் விளையாட்டு மைதானங்களையே எட்டிப் பார்க்காத நிலை உருவாகிற்று. காற்பந்தாட்டம் என்ற விளையாட்டு வெம்பிளி காற்பந்தாட்டத் திடலில் கோல் கம்பங்களிடையே சமாதி செய்யப்பட்டு விடுமோ என்று ஒரு பேரச்சமும் எழுந்தது.

ஆனால் யாருமே முற்றிலும் எதிர்பாராதவிதமாக இன்று கோலம் மாறிவிட்டது. 90 களில் மீண்டும் காற்பந்தாட்டம் முன்பு போல் பிரபல்யமாயிற்று. 1863 இல் முதல் தடவையாக இங்கிலாந்தில் தான் காற்பந்தாட்ட விளையாட்டிற்கான விதிகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இந்தத் தடவை காடைத்தனங்கள் இடம் பெறக்கூடாது என்பதில் இங்கிலாந்து வெகு ஜாக்கிரதையாக செயற்பட்டது. காடைத்தனங்களில் இறங்குவார்கள் என்று சந்தேகப்பட்டவர்களெல்லாம் முன் கூட்டியே பொலிசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். ஜெர்மனியும் தன் பங்கிற்கு சில துப்பறியும் அதிகாரிகளை இங்கிலாந்திற்கு அனுப்பியதோடு ஜெர்மன் (ரவுடித்தனமான) ரசிகர்களை அடக்கவென்றும் சிலரை அனுப்பி வைத்தது. ஜெர்மன் ரசிகர்கள் கூட குழப்பம் செய்வதில் இங்கிலாந்து ரவுடித்தனத்திற்கு சளைத்தவர்கள் அல்ல.

**ஆடிய ஆட்டம் என்ன?-**

என்றுமே இல்லாதவாறு இங்கிலாந்து நன்றாகவே அமர்க்களப்பட்டு ஓய்ந்து போயிருக்கின்றது. 1966 ஆம் ஆண்டு காற்பந்தாட்ட உலகக் கிண்ணத்திற்கான போட்டிகளைப் பிரமாண்டமான அளவில் நடாத்திய இங்கிலாந்து மீண்டும் இந்த ஆண்டு தான் ஐரோப்பிய காற்பந்தாட்ட சாம்பியன் தெரிவுக்கான இறுதி ஆட்டங்களை மீண்டும் பாரிய அளவில் நடாத்தி இருக்கின்றது. உலகளாவிய ரீதியில் தொலைக்காட்சி ஒளிபரப்பு ஏற்பாடும் இந்த நிகழ்ச்சிகளுக்காக புரளும் கோடிக்கணக்கான பணமும் இந்த யூறோ 96 காற்பந்தாட்ட நிகழ்ச்சிகளே அளவில் பெரியது என்பதைக் காட்டுகின்றன. ஐக்கிய ராஜ்யத்தில் (அயர்லாந்து + ஸ்கொட்லாந்து + இங்கிலாந்து) இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்னர்

> **இங்கிலாந்தை அச்சுறுத்திய உதைபந்தாட்டக் காடைத்தனம் நடந்து முடிந்த ஐரோப்பியக் கிண்ணப் போட்டியில் தலைகாட்டவே இல்லை**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிகழ்த்தப்படும் மூன்றாவது முக்கிய சுற்றுப்போட்டி யூறோ 96 என்று வர்ணிக்கப்படுகின்றது. முதலாவது இடத்தைப் பெறுவது 1948 இல் நடந்த ஒலிம்பிக் போட்டிகளில் நடந்த காற்பந்தாட்டப் போட்டி. பின்பு 1967 இல் ஐரோப்பிய சாம்பியன் கிண்ணத்திற்கான போட்டி இடம் பெற்றுள்ளது.

ஜுன் 8 ஆரம்பித்த போட்டிகள் ஜுன் 30 அன்று (இராணி எலிசபெத்தின் சமூகத்தோடு) முடிவடைந்தன. ஏறத்தாழ 250,000 பார்வையாளர்கள் (வெளிநாடுகளில் இருந்து மட்டும்) போட்டிகளை நேரில் கண்டு ரசித்திருக்கிறார்கள். 31 தடவை மோதியிருக்கின்றன. மொத்தம் மோதிய நாடுகள் 16.

**1960 இலிருந்து ஆரம்பித்த இந்த ஐரோப்பிய கிண்ணத்திற்கான காற்பந்தாட்டப் போட்டிகளில் இறுதி ஆட்டத்தில் பங்கு பற்றியவர்களும் இவர்களில் வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தவர்களின் விபரமும் இதோ!**

1960 (பாரிஸ் ) பிரான்ஸ்
சோவியத் யூனியன் 2 - யூகோஸ்லாவியா 1
1964 (மட்றிட்) ஸ்பெயின்
ஸ்பெயின் 2 - சோவியத் யூனியன் 1
1968 (ரோம்) இத்தாலி
இத்தாலி 1 - யூகோஸ்லாவியா 1
மீண்டும் விளையாட அனுமதித்ததில்
இத்தாலி 2 - யூகோஸ்லாவியா 0
1972 பிரஸ்ஸல்ஸ் (பெல்ஜியம்)
மே. ஜெர்மனி 3 - சோவியத் 0
1976 பெல்கிரேட் (யூகோஸ்லாவியா)
செக்கோஸ்லவேக்கியா 2 - மே. ஜெர்மனி 2
பெனால்டிகள் மூலம் செக்கோஸ்லவேக்கியா 5 - 4 என்ற ஸ்கோர் விபரத்தில் வென்றது.
1980 ரோம்(இத்தாலி)
மே. ஜெர்மனி 2 - ஸ்பெயின் 1
1984 பாரிஸ் (பிரான்ஸ்)
பிரான்ஸ் 2 - ஸ்பெயின் 1
1988 மூனிச் (மே. ஜெர்மனி)
ஹொலண்ட் 2 - சோவியத் யூனியன் 0
1992 ஸ்ரொக்ஹோம் (சுவீடன்)
டென்மார்க 2 - ஜெர்மனி 0

இந்தத் தடவை இங்கிலாந்தின் இறுதி ஆட்டங்களின் போது விளையாடத் தெரிவாகிய 16 நாடுகளும் இவை தான்.

இங்கிலாந்து , சுவிற்சலாந்து, ஹொலண்ட், ஸ்கொட்லாந்து, ஸ்பெயின், பல்கேரியா, றோமானியா, பிரான்ஸ்,ஜெர்மனி, செக். குடியரசு, இத்தாலி, ருஷ்யா, டென்மார்க், போர்த்துக்கல், துருக்கி, கொரேசியா.

# அடிவாங்கும் பாரதம்!

'ஆட்டங் காண்கிறதோ' இந்தியா கிரிக்கட் ஆட்டத்தில்?

அண்மையில் இங்கிலாந்தில் நடந்தேறிய மூன்று ஒரு நாள் ஆட்டப் போட்டிகளில் இரண்டில் படுதோல்விகளைச் சம்பாதித்து இந்தியா கிரிக்கட் உலகில் தான் ஆட்டங் கண்டிருப்பதை காண்பித்திருக்கின்றது. முதல் இரண்டு ஒரு நாள் ஆட்டப் போட்டிகளில் சிது என்ற திறமையான அனுபவம் வாய்ந்த இந்திய வீரர் சிறப்பாக ஆடவில்லை என்ற காரணத்தினால் மூன்றாவது போட்டியில் இவர் கோஷ்டியில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

இதன் விளைவு பாரதூரமாக இருந்தது. தான் கிரிக்கட் விளையாட்டிலிருந்து ஓய்வு பெறுவதாகப் பகிரங்கமாக அன்று அறிவித்திருக்கிறார் சிது. இவருடைய 13 வருட ஆட்ட அனுபவம் யாருமே எதிர்பாராத வகையில் திடீரென ஸ்தம்பித்துப் போயிற்று. 1936 இல் ஒரு தடவை முறைகேடாக நடந்து கொண்டார் என்ற அடிப்படையில் லால் அமர்நாத் என்ற இந்திய கிரிக்கட் வீரர் இங்கிலாந்திலிருந்து நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்பட்டார். அந்தக் கசப்பான அனுபவத்தின் பின்னர் இப்பொழுது தான் முதற் தடவையாக இன்னொரு ரூபத்தில் இன்னொரு கசப்பான அனுபவம் முளைவிட்டிருக்கின்றது. டெண்டுல்கார் திறமையாக ஆடுவதும் அநேகமாகப் பல இந்திய துடுப்பாட்டக்காரர்கள் வேண்டிய நேரங்களில் கைகொடுக்கத் தவறுவதுமாக இந்திய கோஷ்டி ஆட்டங்கண்டு போயிருந்த சமயம் ஒரு நல்ல ஆட்டக்காரரை இழந்து 'ஆடிப்' போயிருக்கிறது இந்தியா.

மூன்று மாதங்களுக்கு முன்பு பாக்கிஸ்தானுடன் இந்தியா விளையாடியபோது எப்பொழுதுமே கைகொடுக்கும் டெண்டுல்கார் நேரத்தோடு ஆட்டத்தை இழந்து விட்டார். இப்படி ஒரு இக்கட்டான சூழ்நிலையில் ஒரு சவாலாக இச்சூழ்நிலையை எடுத்து மிகச் சிறப்பாக ஆடிப் பலராலும் பாராட்டப்பட்டவர் சிது. தனது துடுப்பாட்டத்தின் போது மிக நிதானமாகப் பந்துகளை தடுத்துக் கொண்டு ஆடும் அதே சிது, படுவேகமாகப் புயல் போல ரண்களை குவிப்பதிலும் சமர்த்தர். இப்படி ஒரு திறமைசாலி கோஷ்டியில் இருந்து வெளியேறுவது நிச்சயம் ஒரு பேரிழப்பே.

இவரை ஒரு சஞ்சிகை பேட்டி கண்டிருக்கின்றது.

'எதற்காக இப்படி ஒரு திடீர் முடிவெடுத்தீர்கள்?''

என்று கேட்டிருக்கின்றது.

'நான் ஒரு வேண்டாதவனாக்கப்பட்டு விட்டதில் என் மனம் நன்றாகவே புண்பட்டுப் போயிற்று. இதுவே என் முடிவுக்குக் காரணம் '' என்று கூறியிருக்கிறார்.

32 வயது நிரம்பிய இந்த திறமைசாலி இந்தியாவிற்கு விளையாடாமல் இருக்கப் போவது இன்றைய நிலையில் இந்திய கிரிக்கட்டிற்கு ஒரு பலத்த அடி என்பதை மறுப்பதற்கில்லை.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஒருதோழியின் 'கதை'

○ கே.எஸ்.நாராயணன்

சந்தன கடத்தல் வீரப்பனுக்கு இணையாக சசிகலா இன்று தமிழக அரசியலை கலக்கி வருகிறார். கடந்த 10 ஆண்டுகளாக தமிழக அரசியலை பற்றி ஆராய்ந்தால் அதில் ''சசிகலா'' என்ற பெயரை ஒதுக்கி விட்டு எந்த ஆய்வும் நடத்தி விட முடியாது.

தமிழகத்தில் சாதாரண குக்கிராமங்கள் முதல் பெரிய நகரங்கள் வரை எல்லோரும் அறிந்த பெயராகமாறி விட்டார் அவர்.

இன்று கிராமங்களில், 'சசிகலா மிகப்பெரிய பணக்காரியாம். அவருக்கு இருக்கும் நகைகளை வைப்பதற்கு ஒரு பெரிய காரவீடு வேண்டுமாம். அவருக்கு இருக்கும் பட்டுச் சேலைகளை அடுக்கி வைப்பதற்கு பெரிய பங்களாவே போதாதாம்' என வேதாளம் - விக்கிரமாதித்தன் கதை போல பேசிக்கொள்கிறார்கள்.

இந்த அளவு பரபரப்பாக பேசப்படும் சசிகலா யார்? அவரது பூர்விகம் என்ன? ஜெயலலிதாவிற்கு எப்படி நெருக்கமானார்? இன்று அ.தி.மு.க.வில் சசிகலாவிற்கு எதிராக தோன்றியுள்ள ''திடீர்'' எதிர்ப்புக்கு காரணங்கள் என்னென்ன? போன்ற விவரங்களை சற்று ஆலசிப் பார்ப்போம்.

**தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் நன்கு அறியப்பட்ட ஒருவராக சசிகலா இன்று இருக்கிறார்.**

**பூர்வீகம்**

மன்னார்குடிக்கு அருகே மணலி குறும்பல் என்ற சாதாரண குக்கிராமத்தில் வாழ்க்கை நடத்தியவர்கள் சசிகலாவின் முன்னோர்கள். சசிகலாவின் தாத்தா சந்திரசேகரனுக்கு 6 மகன்கள். 3 மகள்கள். இவர்களில் விவேகனந்தன் என்பவரது மகள் தான் சசிகலா.

இவர்களது பூர்வீக சொத்து ஒன்றரை வேலி நிலம் மட்டுமே. அதன்பின்னர் இவர்களது குடும்பம் திருத்துறை பூண்டிக்கு வந்தது. அங்கு சசிகலாவின் தாத்தா சந்திரசேகரன் சிறிய அளவில் நாட்டு மருந்து கடை வைத்து நடத்தி வந்தார்.

அப்போது தான் சசிகலாவின் தந்தை விவேகானந்தன் அங்கு பதிவு பெறாத டாக்டராக பணியாற்றி வந்தார். சசிகலாவின் தந்தை விவேகானந்தனும், தாயார் கிருஷ்ணவேணியும் திருத்துறை பூண்டியில் உள்ள தட்டாரைத் தெருவில் ஒரு ஓட்டு வீட்டில் வாழ்ந்து வந்தனர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்குகொண்டதால் திமுக தலைவர்களுடன் நடராஜனுக்கு ஏற்பட்ட தொடர்பால் அவர் திமுக தலைவர்களுடன் நட்பை ஏற்படுத்திக்கொண்டார்



சசிகலாவை நடராஜன் திருமணம் செய்தபோது திருமணத்தை கலைஞர் கருணாநிதியே முன்னின்று நடத்தி வைத்தார். எம.ஜி.ஆர். பதவிக்கு வந்ததும் நடராஜன் அரச பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டார்

அங்குள்ள புனித ஜோசப் பள்ளியில் படித்த சசிகலா 10-ம் வகுப்பிலேயே தனது படிப்பை பாதியிலேயே நிறுத்தி விட்டார்.

## நடராஜன் குடும்பம்

இதே போல தஞ்சை மாவட்டம் விளார் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர் தான் மருதமுத்து என்ற சிறு விவசாயி. இவர் மாட்டு வண்டியில் நெல் மூட்டைகளை ஏற்றிக் கொண்டு ஊர் ஊராகச் சென்று விற்று வாழ்க்கை நடத்தியவர். இவரது மகன் தான் நடராஜன்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்த போது 1965-ம் ஆண்டு தமிழகத்தில் வெடித்த இந்தி எதிர்ப்பு போரில் நடராஜனும் பங்கு கொண்டார். இதனால் அவருக்கு திராவிட இயக்கத் தலைவர்களோடு தொடர்பு ஏற்பட்டது.

தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் நடராஜன் மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டார். அப்போது முதல்வராக இருந்த கருணாநிதி தலைமையில் நடராஜனுக்கும், சசிகலாவிற்கும் திருமணம் நடந்தது. மருந்து கடை வைத்து ஓரளவு வசதியாக வாழ்ந்ததால் திருமணத்தின் போதே சசிகலாவிற்கு 50 பவுன் நகை போட்டனர்.

தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடராஜன் அரசிற்கு மிகவும் நெருக்கமாக இருந்தார். 1977-ம் ஆண்டு முதல்முறையாக எம்.ஜி.ஆர். ஆட்சிக்கு வந்த போது தி.மு.க. ஆதரவு அதிகாரிகளையெல்லாம் கணக்கெடுத்து பந்தாடினார்கள். அந்த அதிகாரிகள் சாதாரண அதிகாரம் இல்லாத பதவிகளுக்கு மாற்றப் பட்டனர்.

நடராஜன் வேலை நீக்கம் செய்யப் பட்டார். இதனால் சசிகலாவும், நடராஜனும் சென்னையில் மிகவும் கஷ்டப்பட்டனர். அப்போது தான் சசிகலாவின் நகைகள் அடகு வைக்கப்பட்டன. சசிகலாவின் சகோதரி மகன்மார் பாஸ்கரன், தினகரன் (தற்போது மத்திய சிறையில் இருப்பவர்கள்) ஆகியோர் சிங்கப்பூர் சென்று வீடியோ, டெக் போன்ற சாதனங்களை வாங்கிக் கொண்டு இந்தியாவிற்கு திரும்பினார்கள்.

சசிகலாவின் அண்ணன் விநோதகன் டாக்டருக்கு படித்தவர். இப்போது அவர் உயிருடன் இல்லை. தற்போது தஞ்சையில் விநோதகன் நினைவு மருத்துவமனை இயங்கி வருகிறது. இவர் ஓரளவு வசதி படைத்தவர். ஆகையால் இவரது பண உதவியோடு சென்னை ஆழ்வார்பேட்டையில் 'வினோத் வீடியோ விஷன்' என்ற கடையை தொடங்கினார்கள்.

இந்த கடை ஜெயலலிதாவின் வீடு உள்ள போயஸ் தோட்டத்திற்கு மிகவும் அருகில் உள்ளது. அப்போது அ.தி.மு.க.வைச் சேர்ந்த ஜெயலலிதாவிற்கும், கட்சியின் மூத்த தலைவர்களுக்கும் இடையே மிகப்பெரிய ''பனிப்போர்'' நடந்து வந்தது. எஸ்.டி.எஸ்., ஆர்.எம். வீரப்பன், ராகவானந்தம் போன்ற தலைவர்கள் அதிமுக.வில் ஜெயலலிதா ஆதிக்கம் செலுத்துவதை எதிர்த்து வந்தனர். ஆனால் முதல்-அமைச்சர் எம்.ஜி.ஆர். எந்த பக்கமும் சாயாமல் இரண்டு கோஷ்டியினரையும் சமாதானப்படுத்தி கட்சியை நடத்திச் சென்றார்.

அப்போது ஜெயலலிதா பலமுறை எம்.ஜி.ஆருடன் சண்டை போட்டுக் கொண்டு போயஸ் தோட்டத்தை விட்டு வெளியேறாமல் முடங்கி கிடந்தது உண்டு. வீட்டில் பொழுது போகாததால் வீடியோ கடைகளில் கேசட்டுகளை வாங்கிக் கொண்டு வந்து போட்டு பார்த்து பொழுதை போக்கி வந்தார் ஜெயலலிதா.

அப்போது ஜெயலலிதா வீட்டு வேலைக்காரர்கள் சசிகலாவின் கடையில் வந்து வீடியோ கேசட்டுகளை வாடகைக்கு எடுத்து சென்றனர். இந்த கேசட்டுகள் எந்த இடத்திற்கு செல்கின்றன? என்பதை தெரிந்து கொண்ட சசிகலாவின் மனதில் ஒரு பொறி தட்டியது.

அப்போது எம்.ஜி.ஆர். அமெரிக்காவில் சிகிச்சை பெற்று திரும்பிய நேரம். ஜெயலலிதா மீண்டும் அதிமுக. கொள்கை பரப்பு செயலாளராக நியமிக்கப்பட்டார். அப்போது அதிமுக மற்றும் அரசு சம்பந்தமான நிகழ்ச்சிகளை வீடியோ படமெடுக்க அனுமதி கேட்டு ஜெயலலிதாவை சந்திக்க முயன்றார் சசிகலா.

ஆனால் அவரால் முடியவில்லை. ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்திற்கு சென்று ஜெயலலிதாவை சந்திக்க பல நாட்கள் தவம் இருந்தார் சசிகலா. ஒருநாள் ஜெயலலிதாவை சந்தித்து இதற்கு அனுமதி கேட்டார். ஆனால் ஜெயலலிதா, 'இதில் என்னால் ஒன்றும் செய்ய முடியாது. எம்.ஜி.ஆர். அனுமதியை பெற வேண்டும்' என்று கூறிவிட்டார்.

அதன்பின்னர் சசிகலாவின் கோரிக்கையில் ஜெயலலிதா எம்.ஜி.ஆரிடம் பக்குவமாக எடுத்துக் கூறி அனுமதியும் வாங்கி விட்டார். அதன்பின்னர் ஜெயலலிதாவின் நிகழ்ச்சிகளை வீடியோ படமெடுக்கும் உரிமை சசிகலாவிற்கு கிடைத்தது. இதனால் சசிகலாவிற்கும் ஜெயலலிதாவிற்கும் நெருக்கம் ஏற்பட்டது. ஜெயலலிதா எங்கு சென்றாலும் அவருடன் சசிகலாவும் சென்றார்.

இதனால் இருவரும் நெருங்கிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தோழியானார்கள். சுற்று பயணம் முடிந்ததும் வீடியோ படமெடுத்த கேசட்டுகளை ஜெயலலிதா வீட்டிற்கு கொடுப்பதற்காக சசிகலாவே நேரிடையாக சென்றார். அப்போது வீடியோ கேசட்டை போட்டு இருவரும் பார்த்தனர். இதனால் ஜெயலலிதா வீட்டின் சமையல் அறை வரை சசிகலா சர்வ சாதாரணமாக சென்று வந்தார்.

சில நாட்கள் ஜெயலலிதா வீட்டிலேயே சசிகலா தங்கியதும் உண்டு.

இவ்வாறு அவர்கள் நெருக்கம் அதிகமானது. என்றாலும் ஜெயலலிதா எம்.ஜி.ஆரின் பிடியில் இருந்ததால் சசிகலாவின் பெயர் அப்போது இந்த அளவு பிரபலமாகவில்லை.

1987-ல் எம்.ஜி.ஆர். இறந்ததும் உடைந்த அதிமுக.வின் ஒரு பகுதி ஜெயலலிதா கைக்கு வந்தது. அதில் சசிகலாவன் கணவர் நடராஜன் ஆதிக்கம் செலுத்த தொடங்கினார். ஆரம்பத்தில் ஜெயலலிதாவிற்கு சிறு சிறு ஆலோசனைகள் கூறி வந்த நடராஜன் அதன்பின்னர் ஜெயலலிதாவின் நெருங்கிய அரசியல் ஆலோசகராக மாறினார்.

அதிமுக.வில் நடராஜனின் பிடி இறுகியது. 1989-ம் ஆண்டு தேர்தலில் ஜெயலலிதா சேவல் சின்னத்தில் தனித்து போட்டியிட்ட போது நடராஜனின் சிபாரிசை பெற்றவர்கள் பலர் அதிமுக வேட்பாளர்கள் ஆனார்கள். பல இடங்களில் தேர்தலில் நிற்க சீட் வாங்கித் தருகிறேன் என்று கூறி நடராஜன் பணம் வசூலித்த விவரமெல்லாம் பின்னர் பரபரப்பாக வெளிவந்தது.

## ஜெயலலிதா-நடராஜன் பனிப்போர்

அப்போதைய தேர்தலில் ஜானகி அணி முழுமையாக தோற்று அதிமுக முழுவதும் ஜெயலலிதா கைக்கு வந்தது. அவர் அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளராக தேர்ந்து எடுக்கப்பட்டார். இடையில் சில காலம் மறைந்த இரட்டை இலை சின்னமும் மீண்டும் கிடைத்தது.

அப்போது நடராஜனும், சசிகலாவும் ஜெயலலிதாவிற்கு மிகவும் நெருக்கமானார்கள். நடராஜனுக்கு சென்னை பெசன்ட் நகரில் சொந்த வீடு இருந்தாலும் சசிகலாவும், நடராஜனும் ஜெயலலிதாவின் போயஸ்தோட்ட வீட்டிலேயே தங்கி இருந்தனர். அப்போது ஜெயலலிதா வுக்கும், நடராஜனுக்கும் இடையே யான உறவில் விரிசல் ஏற்பட்டது.

இதனால் மனம் உடைந்த ஜெயலலிதா அரசியலை விட்டு விலகுவதாக அடிக்கடி அறிவித்து வந்தார். தனது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்வதாக ஜெயலலிதா எழுதிய கடிதம் நடராஜன் கைக்கு சென்றதும் அவர் அதை சபாநாயகருக்கு அனுப்பாமல் தனது வீட்டில் பத்திரமாக வைத்துக் கொண்டார்.

அப்போது வேறொரு வழக்கில் நடராஜன் வீட்டில் நடத்தில் ஒரு சோதனையில் போலீசாரின் காந்த கண்களில் இந்த கடிதம் சிக்கியது. அந்த கடிதம் பின்னர் பெரிய பூதாகரமானது தனிக்கதை.

அதன்பின்னர் நடந்த ஆட்சி மாற்றத்தில் ஜெயலலிதா முதல்வரானார். அப்போது நடராஜன் செல்வாக்கு பலமடங்கு அதிகரித்தது. தன்னை ஒரு ''குட்டி முதல்வர்'' போலவே அவர் காட்டிக் கொண்டார். ஏன், ஜெயலலிதாவை கவிழ்த்து விட்டு அவர் முதல்வராக முயற்சிக்கிறார் என்ற செய்திகளும் பரபரப்பாக வெளியானது.

இதையடுத்து நடராஜன் போயஸ் தோட்டத்தில் இருந்து வெளியேறி னார். அப்போது, ''என் மனைவியை என்னிடம் இருந்து பிரிக்க ஜெயலலிதா சதி செய்கிறார்'' என்றும் நடராஜன் பரபரப்பான குற்றச்சாட்டு களை கூறி வந்தார். அதன் பின்னர் ஜெயலலிதாவிற்கும் நடராஜனுக்கும் இடையே இருந்த உறவில் சிறு விரிசல் ஏற்பட்டாலும் ஜெயலலிதா சசிகலாவை மட்டும் எப்போதும் பகைத்து கொண்டதே கிடையாது.

ஜெயலலிதா எங்கு சென்றாலும் அவரது நிழல் போல சசிகலா தொடர்ந்து சென்றார். சட்டசபையில் ஜெயலலிதா சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்த போது சசிகலா துணை சபாநாயகர் ஆசனத்தில் அமர்ந்த போது எல்லோரும் வாயடைந்தும் போனார்கள். இதை அப்போது கண்டிக்காத எதிர்கட்சிகளே கிடையாது. ஆனால் ஜெயலலிதா இதையெல்லாம் கண்டு கொள்ளவில்லை.

## அ.தி.மு.க. வினர் குழப்பம்

ஜெயலலிதாவிற்கும், நடராஜனுக்கும் விரோதம் என்றாலும் சசிகலா தொடர்ந்து போயஸ் தோட்டத்தி லேயே இருந்து வந்தது அதிமுக.வினரை மட்டுமல்ல, அனைவரையுமே குழப்பியது. உண்மையிலேயே ஜெயலலிதா விற்கும் நடராஜனுக்கும் கருத்து வேறுபாடுகள் எதுவும் உண்டா? அல்லது நாடகம் நடத்துகிறார்களா? என தெரியாமல் எல்லோருக்கும் குழப்பம் ஏற்பட்டது.

நடராஜன் ஜெயலலிதாவிற்கு எதிராக அறிக்கைகள் விட்ட போது கூட நடராஜனை எதிர்க்க அ.தி.மு.க. அமைச்சர்கள் யாருக்கும் துணிவு இல்லை. ''நமக்கு ஏன் வம்பு? என்ன நடக்கிறது? என்று தூரத்தில் இருந்தே

**வீடியோ படங்களை வாடகைக்கு கொடுக்கும் கடை ஒன்றை நடத்திவந்த சசிகலா ஜெயலலிதாவுக்கும் படங்களை வழங்கினார்.**



**அதிமுகவின் நிகழ்ச்சிசகளை வீடியோ படம் எடுக்கும் பணியை செய்ய தொடங்கியதன் மூலம் ஜெயலலிதாவுடன் நெருக்கம் அதிகமானது**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வேடிக்கை பார்ப்போம்'' என்று ஒதுங்கியே இருந்தனர்.

### நிழல் முதல்வர்

ஜெயலலிதாவுக்கு கிடைக்கும் மரியாதை சசிகலாவிற்கும் கிடைத்தது. தமிழக அரசு விமானத்தில் ஜெயலலிதாவோடு சேர்ந்து சசிகலாவும் சுற்றினார். ''நடமாடும் நகை கடையாக'' சசிகலா பவனி வந்ததும் பலரது கண்களையும் உறுத்தியது. அமைச்சர்கள் உள்பட அதிமுக.வினர் சசிகலாவை, 'சின்ன மேடம்' என்று அழைப்பது தான் வழக்கம்.

சசிகலாவை சந்தித்து பேசினால் எந்த காரியத்தையும் சாதிக்கலாம் என அதிகாரிகள் மத்தியில் பரவலான எண்ணம் ஏற்பட்டது. தமிழகத்தின் நிழல் முதல்வரானார் சசிகலா.

இந்த உறவுகளுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல சசிகலாவின் சகோதரி வனிதாவின் மகன் சுதாகரனைத் தான் ஜெயலலிதா, தனது வளர்ப்பு மகனாக அறிவித்து 100 கோடி செலவில் இந்தியாவே வியக்கும் வண்ணம் திருமணம் நடத்தி வைத்தார். இந்த ஆடம்பர திருமணம் தான் ஜெயலலிதாவின் அரசியல் வாழ்விற்கு ஒரு சறுக்கு கல்லாக அமைந்தது.

ஒரு வேளை சோற்றுக்கு கூட வழியில்லாமல் எத்தனையோ லட்சம் பேர் ஓட்டாண்டிகளாக தமிழகத்தில் திரியும் போது, ஒரு முதல்-அமைச்சர் தனது வளர்ப்பு மகனுக்கு 100 கோடி செலவில் திருமணம் நடத்தியது சரிதானா? அதுவும் 1 ரூபாய் மட்டுமே மாத சம்பளம் பெறும் ஜெயலலிதா வால் இந்த அளவு ஆடம்பரமாக திருமணம் நடத்த முடிந்தது எப்படி? என்ற கேள்வி தமிழகம் முழுவதும் எழுந்தது. இதுதான் அதிமுக.வின் தோல்விக்கு அடிப்படைக் காரணம் என அக்கட்சியின் தொண்டர்களே இன்று வெளிப்படையாக பேசுகிறார்கள்.

''சசிகலாவை உடனே போயஸ் தோட்டத்தை விட்டு வெளியேற்ற வேண்டும்'' என முன்னாள் அமைச்சர்கள் உள்பட பல அதிமுக தலைவர்கள் போர்க்கொடி உயர்த்தியும் ஜெயலலிதா மசிவதாகத் தெரியவில்லை. ''எந்த காரணத்தைக் கொண்டும் சசிகலா போயஸ் தோட்டத்தை விட்டு வெளியேற மாட்டார்'' என ஜெயலலிதா அறிக்கை கொடுத்ததை கண்டு பல அ.தி.மு.க.வினரே அதிருப்தி அடைந்தனர்.

தற்போது ஜெ.ஜெ. டிவிக்கு கருவிகள் வாங்கியதில் ரூ.2 கோடி அந்நியச் செலாவணி மோசடியில் தொடர்பு இருப்பதாக கூறி அமலாக்கப் பிரிவினர் சசிகலாவை கைது செய்துள்ளனர்.

இனிமேலும் ஜெயலலிதா, சசிகலா உறவு நீடிக்குமா? அ.தி.மு.க.வின் எதிர்காலம் என்ன? போன்ற கேள்விகளுக்கு காலம் தான் பதில் கூற வேண்டும்.

### சசிகலா - பாம்பா? கயிறா?

அதிமுக-வின் மிகப் பெரிய தோல்விக்கு காரணமே சசிகலாவும் அவரது குடும்பத்தினரும் தான் என்று முன்னாள் அமைச்சர்களும், அதிமுக தலைவர்களும் வெளிப்படையாக கூறியும் அவரை போயஸ் தோட்டத்தை விட்டு வெளியேற்ற ஜெயலலிதா விரும்பவில்லை. ஆகையால் எம்.ஜி.ஆர். காலத்தில் இருந்து, எந்தவித பலனையும் எதிர்பாராமல் அதிமுக-வில் இருக்கும் தொண்டர்கள் கூட மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளனர்.

**நிழல் முதல்வராக இருந்து வந்த ஜெயலலிதாவின் உடன்பிறவா சகோதரி**

''சசிகலா விஷயத்தில் ஜெயலலிதாவை அதிகமாக சீண்டினால், ஜெயலலிதா எங்கே அரசியலுக்கு முழுக்கு போட்டு விடுவாரோ!'' என அதிமுகவின் ஒரு பகுதியினர் சசிகலாவை எதிர்க்கதயங்குகின்றனர். சசிகலாவை பாம்பு என்று அடிக்கவும் முடியவில்லை. கயிறு என்று தாண்டவும் முடியவில்லை என்று அதிமுக தொண்டர்களே குழப்பத்தில் உள்ளனர். இவ்வளவு தோல்விக்கு பின்னரும் சசிகலாவை தனது வீட்டில் இருந்து ஜெயலலிதா வெளியேற்றா விட்டால் அதிமுகவில் நீடிப்பதில் அர்த்தமில்லை என்பதும் பல தொண்டர்களின் கருத்து. இதற்கு முடிவு என்ன என்பது யாருக்கும் தெரியவில்லை.

### குடும்பம் ஒரு கதம்பம்

1. சசிகலாவின் அண்ணன் டாக்டர் விநோதகன் தஞ்சையில் தனியாக மருத்துவமனை வைத்து நடத்தி வந்தார். அவர் தற்போது உயிருடன் இல்லை. இருந்தாலும் அவரது பெயரில் இப்போதும் அந்த மருத்துவமனை இயங்கி வருகிறது.
2. சசிகலாவின் மற்றொரு அண்ணன் ஜெயராமன் ஹைதராபாத்தில் உள்ள ஜெயலலிதாவின் திராட்சை தோட்டத்தை கவனித்து வந்தார்.
3. சசிகலாவின் அண்ணன் சுந்தரவதனம் அண்மையில் சாஸ்திரி பவனில் சசிகலா அமலாக்கப் பிரிவிற்கு வந்த போது புகைப் படக்காரர்களை தாக்கிய வழக்கில் கைது செய்யப்பட்டுள்ளார்.
4. சசிகலாவின் தம்பி திவாகர்.
5. சசிகலாவின் அக்காள் வனிதா. இவரது மகன் சுதாகரனைத் தான் ஜெயலலிதா தனது வளர்ப்பு மகனாக தத்தெடுத்தது குறிப்பிடத்தக்கது. இந்த வனிதா-விவேகானந்தன் தம்பதி யினருக்குத் தான் தினகரன், பாஸ்கரன் ஆகிய மகன்களும் சுப்ஸ்ரீ என்ற மகளும் உள்ளனர்.

பாஸ்கரன் ஜெ.ஜெ. டிவிக்கு கருவி வாங்கியதில் ரூ. 2 கோடி அந்நியச் செலாவணி மோசடியில் கைது செய்யப்பட்டு ஜாமீனில் வெளிவந்துள்ளார். இவரும் சசிகலா ஆஜராக வந்தபோது அவருடன் வந்தார்.

தினகரன் ரூ. 65 கோடி அந்நியச் செலாவணி மோசடியில் காபிபோசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

சசிகலாவிற்கும் ஜெயலலிதாவுக்கும் உறவு ஏற்பட்ட பின்னர் போயஸ் தோட்டமே அடியோடு மாறத் தொடங்கியது. பல ஆண்டுகளாக அங்கு வேலை பார்த்து வந்த பலர் வெளியேற்றப்பட்டனர். சசிகலாவின் ஆதிக்கம் படிப்படியாக போயஸ் தோட்டத்தில் பரவியது. இதனால் சசிகலாவின் ஊரான மன்னார்குடி, திருத்துறைபூண்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த அவரது உறவினர்கள் பலர் போயஸ் தோட்டத்தில் வேலைக்கு சேர்ந்தனர். இவர்களுக்கும் ஏற்கனவே அங்கு தங்கியிருந்து வேலை செய்தவர்களுக்குமிடையே ''பனிப்போர்'' நடந்து இறுதியில் பழைய ஆட்கள் எல்லோரும் வெளியேறி விட்டனர். தற்போது போயஸ் தோட்டம் முழுவதும் சசிகலா குடும்பத்தின் கட்டுப்பாட்டில் தான் உள்ளது.

போயஸ் தோட்டத்தில் பணியாற்றிய தலைமைக் கழகத்தைச் சேர்ந்த துரை, டிரைவர்கள் ஜெயமணி, செல்லப்பா மற்றும் சுந்தரமூர்த்தி, ஜெயலலிதாவின் தாயார் சந்தியாவின் காலம்முதல் பணியாற்றிய மாதவநாயர் உள்பட பலரும் வெளியேறினார்கள். ஜெயலலிதாவின் சகோதரர் ஜெயகுமாருக்கும் ஜெயலலிதாவுக்கும் இடையே கூட சுமுகமான உறவு இல்லை.

அதனால் தான் ஜெயக்குமார் இறந்தபோது ஜெயலலிதா ஒரு சில நிமிடங்கள் மட்டுமே அங்கிருந்து மலர் வளையம் வைத்துவிட்டு உடனே திரும்பி விட்டார். ஆனால் ச்சிகலாவின் தாயார் கிருஷ்ணவேணி இறந்த போது ஜெயலலிதா தனி விமானத்தில் அமைச்சர் புடைசூழ மன்னார்குடிக்கு வந்து அஞ்சலி செலுத்தியது பலருக்கும் நினைவிருக்கலாம்.★




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழக கலைப் பயணம்

தமிழகத்தில் நாடகங்களையும், பயிற்சிகளையும் நடாத்துவதற்காக லண்டனில் உள்ள 'களரி' அமைப்பினர் இம்மாதம் 22ம் திகதி தமிழகம் செல்கின்றனர்.
சென்னைப் பல்கலைக்கழகத்தினரின் அழைப்பை ஏற்று இந்தப் பயண ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.
நாடக உலகில் ஈழத்தவர்களுக்குப் பெருமை தேடிக் கொடுக்கும் விதத்தில் கடந்த காலத்தில் ஈழத்திலும், லண்டனிலும், ஐரோப்பிய நாடுகளிலும், கனடா விலும் பல நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றியவரும், பல நல்ல கலைஞர்களை உருவாக்கியவரும், மேடை உத்திகளையெல்லாம் கற்றறிந்த நாடக விற்பன்னருமான தாஸிசியஸ் வழிநடாத்தலில் இயங்கும் 'களரி' அமைப்புக்கு பல்கலைக்கழகம் ஒன்று அழைப்பு அனுப்பி தமிழகத்தில் இவ்விதமான கௌரவத்தை அளிப்பது ஈழத்துக்குக் கிடைத்த பெருமை என்றே சொல்ல வேண்டும்.
பிபிஸி தமிழோசையில் பணியாற்றும் கலைஞர் தாஸிசியஸ் நல்ல எழுத்தாளர் கூட. அவரிடம் 'களரி'யின் பயணத்தைப்பற்றிக் கேட்டபோது, மிக அடக்கமாகச் சொன்னார்:
'இந்த வாய்ப்பை தனியே நாம் மட்டும் பயன்படுத்துவதில் எமக்கு உடன்பாடு இல்லை. அகதிகளாக எம் மக்கள் போயப் புகுந்த வெவ்வேறு நாடுகளில் உள்ள வெவ்வேறு கலை அமைப்புகளும் இதைப் பயன்படுத்த வேண்டுமென விரும்புகிறோம். எனவே, நோர்வே, பாரிஸ், ஜெர்மனி, கனடா, ஒஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள கலைஞர்களையும் இதில் பங்கெடுக்கமாறு கேட்டிருக்கிறோம். அவர்களும் வர இசைந்திருக்கிறார்கள். இலங்கையில் இருந்தும், குழந்தை ம.சன் முகலிங்கம், பேராசிரியர் சிவத்தம்பி ஆகியோர் உட்பட எம்மோடு வந்து இணைய சம்மதம் தெரிவித் திருக்கிறார்கள்.


Telegram : UNIVERSITY, Madras

UNIVERSITY OF MADRAS

Mr A.C.Tarcisius
"KALARI" - A Theatre Movement
90 Brampton Grove
Kenton, MIDDX HA3 8LF
U. K.

Dear Mr.Tarcisius,

Greetings from Madras.

[illegible]

The exact dates of the meet can be finalised only on receiving your favourable reply.

[illegible]

We will be happy if KALARI can perform in other towns of Tamilnadu like Madurai, Trichy, Thanjavur and Pondicherry.

Kindly confirm your participation at your earliest [illegible] to proceed with further arrangements.

Thank you. With Kindest Regards,

Sincerely yours,

Dr. V. Arasu
Co-ordinator,
Department of Tamil Literature,
University of Madras (Marina Campus)
MADRAS - 600 005.

பல திசைகளிலும் பரவி இருக்கும் ஈழத் தமிழ் கலைஞர்களும் அறிவு ஜீவிகளும் ஆக்கபூர்வமான முறையில் சந்தித்து, ஆரோக்கியமான ஒரு கருத்தப் பரிமாற்றம் செய்யும் ஒரு முதல் முயற்சியாக இது அமைய வேண்டுமென்பதே எனது வேணவா. ஈழத் தமிழர் பிரச்னையை அரசியல் கண்ணோட்டத்தில் அல்லாது, கலை வடிவில் எடுத்துக் கூறும் ஒரு மேடையாக இது பரிமளிக்க வேண்டுமென்பதே எமது எதிர்பார்ப்பாகும்'.
இம்மாதம் 23ம் திகதியில் காலை மாலையில் பயிற்சிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. 28ம் திகதி மாலையில் முதல் மேடையேற்றத்தை 'களரி' அமைப்பினர் தமிழ்நாட்டில் மேற்கொள்கின்றனர். அன்றிலிருந்து செப்டம்பர் 6ம் திகதிவரை காலையில் கருத்தரங்குகளும், பயிற்சிப் பட்டறைகளும் நடத்தவுள்ளனர்.
7ம் திகதி முதல் தமிழ்நாட்டுக் கிராமங்களில் புழக்கத்திலுள்ள கலை, இசை, ஆட்ட வடிவங்களை உரிய ஆசான்கள் மூலம் கற்பிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
15ம்திகதி பயணத்தை முடித்துக் கொண்டு அகதிக் கூடுகளுக்குத் திரும்புவதே 'களரி'யின் திட்டம்.
இந்த முயற்சி வெற்றிபெற 'களரி'யின் சார்பில் கலைஞர் தாஸி அன்பான வேண்டுகோளை கலை உள்ளங்களுக்கு விடுத்துள்ளார்.
'தமிழ் நாட்டு அமைப்புக்கள் எமக்குச் சந்திப்புக் களத்தையும், மண்டப ஏற்பாடுகளைச் செய்து தருகிறார்கள். பயிற்சி பெறவும், உணவுக்கும் நாமே பொறுப்பேற்க வேண்டும். கிடைத் திருக்கும் வாய்ப்பை 'களரி' யினர் மட்டுமே பயன்படுத்துவதாக இருந்திருந்தால் எமக்கு அதிகம் செலவு இருந்திருக்காது. ஆனால் பல்வேறு நாடுகளிலுள்ள அகதிக் கலைஞர்களும், தமிழ் நாட்டுக் கலைஞர்களுடன் கலைப் பரிமாற்றம் புரிய ஒன்று கூடும்போது அவர்களுடைய தங்கும் வசதி, உணவு போன்றவற்றை நாமே ஏற்க வேண்டியுள்ளோம். உள்ளூர் சுற்றுப்பயணப் பொறுப்பை நம்மவரான வி.கே.ரீ.பாலனின் மதுராட்ரவல்ஸ் ஏற்றுள்ளது மகிழ்ச்சி தருகிறது.
எங்கள் முயற்சி வெற்றி பெற உங்கள் உதவி வேண்டும். எங்கள் முயற்சியின் உள் ஆத்மாவை உணரக் கூடிய இதயங்களிடமே இந்த உதவியைக் கேட்கிறோம். முடிந்தால் பொருளுதவி செய்யுங்கள். இயலாவிட்டால் மனமார்ந்த தங்கள் ஆசியை களரி அமைப்புக்குத் தாருங்கள். எங்கள் முயற்சி வெற்றி பெற எம்மை வாழ்த்துங்கள்'

**'களரி'யின் இம் முயற்சி தொடர்பாக தொடர்பு கொள்ள விரும்புவோருக்கு:**

**A.C. TARCISIUS,**
**90,BRAMPTON GROVE,**
**KENTON,**
**HARROW HA3 8LF**

**Tel:(Day)**
**0171 257 8152**
**(Res)**
**0181 907 7785**

www.tamilarangam.net


# VARSHI'S

## SUPERSTORE & OFF LICENCE



**SRI LANKAN AND SOUTH INDIAN FOODS**

FRESH VEGETABLES, FRUITS, MEAT, FISH, TINED FOOD, NEWSPAPERS AND AUDIOS ETC.

**99 BURLINGTON ROAD**
**NEW MALDEN, SURREY KT3 4LR**
**TEL: 0181-336 0061**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மனைவியின் பக்தன்

அவள்தான் மனைவி
அவள்தான் பெண்
பட்டுச் சேலை_ குடும்பம்!
சொட்டுக் கண்ணீர்_ அதில்
சொட்டுத் திராவகம்!

கண்டதற்கெல்லாம்
கண்ணீர் விடும் மனைவி
கணவனைத் தனது
கண்ணீரால் நனைந்த
உடை போட்டு_வெளிக்
கடைவீதி அனுப்புவள்!

மணமான புதிதில்_ என்
மனைவியும் அப்படியே!
வாய்ச் சொல்
வாயில் இரக்க
வழிந்தோடும்
நதிக் கண்ணீர்!

கைக் குழந்தை சில நேரம்
கண்ணீர் விட்டு அழும்
காரணம்_ புரியாது!

கையில் கிடைப்பதைக்
காட்டி மயக்குவோம்!
புட்டிப் பால் எடுத்து
ஊட்டிப் பார்ப்போம்!

தொடர்ந்து அழுது
கொண்டிருக்கும்
தொட்டில் பிள்ளை_ நம்முடி
கொட்டிப் போகும் அளவு
கொட்டிடும்_ கண்ணீர்!

கண்ணீர் விடுவதில்
கைப்பிள்ளை_ என் மனைவி

ஏன் அழுகிறாய் என்று
எழுபது முறை கேட்பினும்
எழுபத்தி ஒரு வினாடியும்
எதுவும் கூறாத 'மவுனம்'
ஓங்கிக் குரல் கொடுத்தால்
'ஒன்றுமில்லை' _ பதில்!

ஒன்றுமில்லாததற்கு ஏன்
ஓயாது அழுகிறாள்?
அவள்தான் 'மனைவி'
அவள்தான் 'பெண்'!



ஒருநாள் 'ஒன்று'
சொன்னேன்!
மறுநாள் கண்ணீர் இல்லை!
அந்தக் கமுக்க_ ரகசியம்
இந்த உலகமும் அறியட்டும்!
"அம்மா! தாயே! நீ
அழுது கண்ணீர் விட்டால்
அலுவலகம் செல்லும்
போது
அலைபாயும் நெஞ்சு!

நடுங்கிய மனதுடன்
நடுவீதி நடப்பேன்!
ஓடும் வண்டி_ என் மீது
ஏறினாலும் ஏறும்!

அலுவலகத்தில்_ என்
அலுவல் நடக்காது!
மேலதிகாரி_ என்
வேலையைக் கிழிப்பார்!

வீட்டில் நீ விடும் கண்ணீர்_
என்னை
வீட்டுக்கு அனுப்பிவிடும்!
செல்லும் காரியம்_ எல்லாம்
செல்லாது ஆகிவிடும்!

சிரித்து நீ அனுப்பினால்_
நான்
செழித்து வீடு வருவேன்!
அழுது நீ அனுப்பினால்_ நீ
அழும்படி வீடு வருவேன்!

கேட்பது
எதுவாயிருந்தாலும்
கேவி அழாமல் கேள்!
சொல்வது
எதுவாயிருந்தாலும்
'சொட்டு' இல்லாமல்
சொல்!

கண்ணீரை_ இனி உன்
கண்ணில் கண்டால்
மண்ணின் வாழ்க்கை_ என்
மனது விரும்பாது!
கண்ணீர் விடுவதற்கோ
கன்னி_ உன்
கை தொட்டேன்?
குமுறி அழுவதற்கோ
குமரி_ உனைக்
கொண்டு வந்தேன்?

ஒவ்வொரு துளிக்
கண்ணீரும்
ஒவ்வொரு துளைக் காயம்_
அம்மா!
காயம் படாமல் நான் வாழ_
உன்
கண்ணீரைத் துடைத்து
விடு!
கண்ணில் இட்ட 'மை' _ உன்
கண்ணீரில் நனையாமல்
மண்ணில் வாழ்வேன்_
இல்லையேல்
விண்ணில் ஏறிடுவேன்!

## பூவே!
## பூவே!

எனக்கெனவே பிறந்தாள்!
எண்ணிப் பார்த்தேனோ_
வண்ணத் துணைமயில்
வந்து உதித்த நாளை...!

அவனியில் உதித்ததும்
'அம்மா' என்றாளோ?
அன்றே எனை நினைத்து
'அத்தான்' என்றாளோ?

அந்த நாள் பொக்கை
வாய்ச்சிரிப்பு_
வந்து வாழ்ந்து முடி நரைத்த
பின்
சிரிக்கப் போகும்
சிரிப்பிற்குச்
சிறு வயது 'ஒத்திகையோ'?

அடியார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தரமான கடல் உணவுப் பொருட்கள் என்றதும்
ஞாபகத்திற்கு வருவது கஸ்தூரி

கணவாய், நண்டு, இறால், மீன் வகைகளை
இறக்குமதி செய்து விநியோகம் செய்கிறார்கள்
கஸ்தூரி நிறுவனத்தார்
ஒரு முறை சுவைத்தால் மறுமுறை மறக்க மாட்டீர்கள்

# கஸ்தூரி மார்க்

கடல் உணவுப் பொருட்க்ள்

**Kasturi Limited**

290B, Ealing Road, Alperton, Middlesex. U.K,
Tel: 0181-903 4276 Fax: 0181-903 0827

# MARKANDAN & Co

**SOLICITORS & ADMINISTRATORS FOR OATHS**

## IMMIGRATION / HOME OFFICE

**URDU, PUNJABI, GUJERATI & HINDI SPOKEN**
**HOME VISITS ARRANGED**

**NO APPOINTMENT NECESSARY**
HOME OFFICE & PORT VISITS
*WE ARE ALWAYS FRIENDLY, EASY TO TALK TO AND KEEN TO HELP*

Thamil House,
720 Romford Road,
Manor Park, London E12 6BT

**Telephone: 0181-514 8188** **Fax: 0181-514 8303**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



என் மனைவி குழந்தையாய்
தன் வீட்டில் தவழந்த
காட்சிதனைக் கண் மூடி
காண்கிறேன் ! ஓ.. ஓ.. !

மடியில் தவழ்வதற்கே_ என்
மடியில் தவழ்வதற்கே
தரையில் தவழ்ந்தாளோ ?_
ஒரு
குறையில்லாச் சிறு நிலா.. ?

பூவாய் என் வாழ்வில் வந்த
பூவை பூப்படைந்த போது...

துடித்தாளோ_
துவண்டாளோ ?
துன்பத்தால்
மருண்டாளோ ?
விண் விண் என்று
வலி ஏற அழுதாளோ... ?

சிந்தை நடுங்கி நின்றாளோ ?
செய்வதறியாது
கூவினாளோ ?
செத்துப் பிறக்கவும்
ஜீவன் சுமக்கவும்
பருவம் வந்ததென்று
பயந்து நின்றாளோ ?

அவ்வேளையில் நான்
அங்கு இருந்திருந்தால்..

குனிந்த முகத்தைக்
கனிந்த அன்பால்
கையில் எடுத்துக்
கண்ணீர் துடைத்து
உச்சி முகர்ந்து..
மெச்சி முத்தமிட்டு..
செவியில் வாயிட்டு
சில சொல்வேன்.

பூவனத்து அரும்பே !
பூவானாய் இன்றே.. !
பிறப்புப் புத்தகத்தின்
பிள்ளையார் சுழி இது !
உலகச் சக்கரத்தின்
ஒரு முதல் சுழற்சி இது !
நிரந்தரத்தின் _ புது
நூல் இழை இது !

தாங்கு_ தாயே_ இத்துன்பம்
தாங்கு_ தாயே ! நீ இதைத்
தாங்காவிடில் _ இறப்பில்
தூங்கிடும் உலகம்_ தாயே !

அழகு முகம்_ விரி மார்பு
எழில்மிகு கை_ கால்



ஆடை_ அணி நகை
படிப்பு_ பால் _ ஆடல்
இவை அல்ல பெண்.. !

மாதம் ஒரு முறை நிகழும்
மாய விஞ்ஞானமாம் இது
இருந்தால் தான்_ நீ
இவ்வுலகில் பெண்.. !

## எடுத்து வைப்பவளே!

தாய் தந்தை மாமன் மாமி
தம்பி தங்கை உற்றார்
உறவினர்
சகலருக்கும்
மைத்துனருக்கும்
சமமான பார்வை
உன்பார்வை !

என்னைப் பார்க்கும்
உனது விழிகளில்
எத்தனை தனிப்பார்வை !

கெஞ்சும் பார்வை !
கொஞ்சும் பார்வை !
ஓரக்கண் பார்வை !
ஒவ்வொரு இரவிலும்
மார்பில் முகம் வைக்கும்
'பாதிக்கண்' பார்வை !
உன்னைத் தொட்டு
என்னை இழந்தபோது
அன்னையைப் போல்
அடியவனின்
முடிகோதிவிடும்
'மாதா' பார்வை !
உன் தந்தை வந்த போது
உள்ளார்ந்த ஒரு சிரிப்பு !
என் தந்தை வந்தபோது
அடக்கமான (பவ்யச்)
சிரிப்பு !
உன் தாய் வந்தால்
ஒரு 'மித'ச் சிரிப்பு !
என் தாய் வந்தால்
ஒரு 'இத'ச் சிரிப்பு !
உன் உடன்பிறப்பார்
வந்தால்
ஒரு 'மூப்பு'ச் சிரிப்பு !
என் உடன் பிறப்பார்
வந்தால்
ஒரு 'தாய்மை'ச் சிரிப்பு !
என் ஆண் நண்பர்கள்
வந்தால்
கண் அறிந்து_ பின் ஒரு
'கண்ணகி'ச் சிரிப்பு !

ஆனால் எனக்கு மட்டும்
அந்தரங்கச் சிரிப்பு !
ஆனந்தச் சிரிப்பு !
அறை குலுங்கும் சிரிப்பு !
தொட்ட போதெல்லாம்
வெட்கச் சிரிப்பு !
தொடாதபோது
தொட்டிழுக்கும் சிரிப்பு !

பதார்த்தம்_ தொடுகறி
பலருக்கும் சமமாகப்
பரிமாறி வைப்பாய் !

எனக்கு மட்டும்
எது ஊற்றினாலும்
எனக்குத் தெரியும் !
எனக்கென்றே
எடுத்து வைத்திருப்பாய்
எழிலான சிறு பாத்திரத்தில்
எனக்குப் பிடித்ததை!
சுயநலமா_ இது ?

துணை நலம்_
துணைவன் நலம் !

உன் உடலில் கூட
எனக்கென்று
எடுத்து வைப்பாய்_ பிறவி
எடுத்த நாள் முதலாய் !

பெற்றோர் தொட்டதுண்டு !
பிள்ளைகளும்
தொட்டதுண்டு !

அவர்கள் தொடாத
அழகுப் பழத் தோட்டத்தை
எனக்கென்றே எடுத்து
வைத்த
என்னவளே ! வாழ்க!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


RATNA & CO
SOLICITORS

TEL:0181- 470 8818

CONTACT:
Mr. M. Ratnapalan &
Mrs. K. Ratnapalan

OPEN: MON-FRI 9.30-5.30
SAT 10.00-1.00

OTHER LANGUAGES SPOKEN
TAMIL - SINHALAM
- MALAYALAM
HINDI - URDU - PANJABI

168 HIGH STREET NORTH,
EASTHAM,
LONDON E6 2JA


## சிலுவையில் அறையப்பட்ட அகதிகள்

அன்று-
வளநாடும் மழகளிலும்
வாங்கி வந்த பாணன்
பரிசு பெற்ற பூமி!

புறநானூற்றையும்
புறம் காட்டிப்
புலிக் கொடி-
பறந்த பூமி!

இன்று-
ஆண்டவரே!
ஏன் என்னைக் கைவிட்டீர்!!
என்று-
சிலுவையில்
அறையப்பட்ட
யேசுக்களாய்-
ஈழத்து அகதிகள்!

இருண்ட கண்டத்திலும்
கறுப்புச் சூரியன்
ஒளி விளக்காயிற்று!

ஈழத்து-
வரண்ட பூமியில்
உதிரச் சேறு
உறைந்து கிடக்கின்றது!

அன்று-
பாழ் நிலத்திலும்
பயிர் வளர்த்த
யாழ்ப்பாணத்தான்
இன்று-
பைன் மரக் காடுகளில்
வயிறு வளர்க்கும்
அவலம் நேர்ந்ததென்ன?

மார்கழிக் கடுங்குளிரில்
மகனுக்கு ஆகாதென்று
முந்தானையில்-
முகம் போர்த்தித்
'தேத்தண்ணி'
கொடுத்த அம்மா
சொந்த நாட்டில்
அகதியாய் அலைந்திருக்க
மகனோ-
அந்நிய நாட்டின்
பனி உறையும்
தெருக்களைக் கூட்டிக்கொண்டு!
விடுதலை என்பது
இப்போது தேவை!

ஆன்மாவுக் கன்று,
தேகத்திற்கு மன்று:
தேசத்திற்கு!

- கணபதி கணேசன்

www.tamilarangam.net



சின்னச் சின்ன ஆசை_
சின்ன மயிலே ! துணை
மயிலே !
உனக்கு இருப்பதாய்
உணர்ந்தேன் _ இன்றே !

சினிமா மோகம் உனக்கு
உண்டு
சேலையில் பைத்தியம் நீ !
நகை புதிது சேர்ப்பதில்
ஆசை !
நாலு முழப் பூவிலும் பற்று !
தொலைக்காட்சி _ சொந்த
வீடு
தொடர்கதை_ சிறுகதை
தோட்டத்து மலர்
பார்ப்பதிலும்
தெருக்காட்சி காண்பதிலும்
சின்னச் சின்ன ஆசை
சிறு மயிலே ! உனக்கு
உண்டு !

சினிமாவில் மோகம்தான் !
தனியாகப் போவதுண்டா ?
என்னை இழுத்துப்
போவதில்
எத்துணை ஆனந்தம்
உனக்கு !
சேலையில் பைத்தியம்
தான் !
சேலை வாங்கி வந்ததும்
எப்படி ? எப்படி ? _ என்று
கேட்டு
என் உயிர் துழைப்பது ஏன் ?

நகையிலும் ஆசை உண்டு !
நகை வாங்கி வந்ததும்
போட்டுக் காட்டி என்
புன்சிரிப்பைக் கேட்பது
ஏன் ?

கூந்தலில் மலர்மீது
பற்றுதான் !
கூந்தலில் மலர் வைக்க
வேண்டி
குறும்பார்வை_'செய்' எனக்
கூறும் பார்வை என் மீது
ஏனோ ?

சின்னச் சின்ன ஆசையிலும்
தன்னந்தனி நுகர்வு
இல்லையோ ?
சின்னஞ்சிறு மகிழ்ச்சியிலும்
சித்திரமே ! எனக்குப்
பங்கோ ?
உனக்கென்று 'சுகம்'



சேர்த்தாய்
எனக்கென்று இருக்கும்
சுகத்திலும்
எனைச் சாட்சியாய்_
சபாநாயகனாய்
ஏற்றி வைத்தே கீழே
நின்றாய் !
வீட்டுக்காரி மட்டுமா நீ
கூட்டுக்காரி _ உன் தனிச்
சுகத்திலும் பங்கு தரும்
கூட்டுக்காரி !

## என்னங்க..! ஏன்னா!

என்னை நீ ?
என்னங்க
ஏன்னா.. !
என்று அழைக்கும்போது..
சொல்லா அது ?
ஜலதரங்கம்_ ஒரு
சொல்_பல பொருள் !

படுக்கையில் கிடக்கும்
போது
பாய்ந்தது அந்தச் சொல் !

மணி எட்டு
மனிதனுக்கு
இன்னுமா
தூக்கம் ?
எழுங்கள்: குளியுங்கள் !
ஏடு படியுங்கள் !
நடவுங்கள் _ விரையில் !
நாழி ஆயிற்று !
ஏ.. அப்பா..
என்னங்க_ என்றால்

இத்தனையா_
இத்தனையா ?

எங்கோ பார்த்திருப்பேன்
"என்னங்க" என்பாய் !
பேசுகிறேன்_ பல நிமிடம்
பகல் கனா_ என்ன_ ?
பதிலைச் சொல்லுங்கள்
பணம் உண்டா ?
'பர்சில்' காணோமே ?

விழிபெயர்க்கும்
வினாக்கள் புதைத்த
"என்னங்க" என்பது
இது தானோ... ?

உளறிக் கொண்டிருப்பேன்
உற்றார் நண்பர்களிடம் !
கதவு ஓரத்தில் இருந்து
காது துழைக்கும்
"என்னங்க"

இங்கே வாங்க கொஞ்சம் !
இன்னது பேசுவது
என்றில்லையா ?
நாளைக்குக் கேலி வரும் !
அன்றொரு நாள்_ உனை
அழகு படுத்தி_ என்
அருகே படுத்திருப்பாய் !
அப்பாவி நானோ..
அலைச்சலில் துவண்டு,
அரைத் தூக்கம் போடும்
போது..

"என்னங்க"
எனும் அழைப்பு_
இரவுச் சங்கீதத்தில்
இனிமைச் சங்கதி!

பூவும் பொட்டுமாய்
பூவுலகில் உனைவிட்டு
காலில்லாக் கட்டிலில்
கால் நீட்டி கண்மூடி
நாலுபேர் தூக்க
நான் 'போகும்' போது..

"என்னங்க"..
என்பாயே..!
எட்டுத் திசையும் _ உன்
கூந்தல் மலர்
குதறி எறிவாயே!
அந்த ஒரு 'என்னங்க' _
மட்டும்
இந்தப் பாவியின் காதில்
எட்டாதே?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பாரிசில் கோல்ட் என்றதும் உங்கள் நினைவில் நிற்கவேண்டிய ஸ்தாபனம்

# கோல்டன் ஸ்டார்

# GOLDEN STAR

**(BIJOUTERIE - HORLOGERIE - CADEAUX - IMPORT - EXPORT)**



உங்கள் அழகை மேலும் அதிகரிக்க
உங்களுக்கு வேண்டிய தங்க நகைகளை
தரமான சிறந்த வேலைப்பாடுகளுடன்
உங்களுக்குத் தருபவர்கள்.

கற்கள் பதித்த மோதிரங்கள், கைச்செயின்,
காப்பு, சங்கிலி, தாலி, தாலிக்கொடி,
தோடு, அட்டியல், பதக்கம்.

பட்டுப் புடவைகள், பட்டு வேட்டி, சால்வைகள்,
வேண்டிய அளவுகளில் சேட்டுகள், ரவுசர்கள்,
சிறுபிள்ளைகளின் உடுப்பு வகைகள்.

கைக்கடிகாரங்கள்,
சுவர்–மேசை மணிக்கூடுகள், கல்குலேற்றர்கள்,
வீட்டை அலங்கரிக்க
கவர்ச்சிக் கலைப்பொருள்கள்,
தெய்வச் சிலைகள், எவர்சில்வர் பாத்திரங்கள்,
நிறைகுடச் செட்டுகள், வேண்டிய அளவுகளில்
குத்துவிளக்குகள், வோக்மன், ரேடியோ கசெட்
றெக்கோடர், புதிய–பழைய பாடல்கள் அடங்கிய
ஓடியோ கசெட்டுகள்.

மங்கையர் எழில் கூட்டுவதற்கான
அழகுசாதனப் பொருள்கள், இமிட்டேசன்
நகைகள், வெளிநாட்டு வாசனைத்திரவியங்கள்
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள



## GOLDEN STAR

**199, Rue du Fg. St. Denis, Paris**
**Tel: 42 09 26 50 / 46 07 26 44**
**Metro: La Chapelle, Gare du Nord**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அன்னை - பூமி



-ராதேயன்

அம்மா!
என்னை மன்னித்துவிடு
இப்படிச் சொல்ல—
எனக்கு விருப்பமில்லை.
ஏனெனில் ஒரு—
குற்றவாளியாகப்
பிரியவில்லையே நான்.
அப்படியாயின்
மறந்துவிடு எனலாம்
அப்படிச் சொல்ல
எனக்கு அருகதையில்லை.
நினைக்கும் உரிமை
உனக்கே யானது.

●

அம்மா! உனக்குத்
தூக்கமே வருவதில்லையா?
எனக்காக ஏன்
விழித்தே இருக்கிறாய்?

●

நீயோ என்—
தேகத்தை மட்டுமே யோசிக்கிறாய்
நானோ எம்—
தேசத்தை யோசிக்கிறேன்.

●

என்றும் போல்
வாசலில் நின்று
வழியைப் பார்த்து
என்—
வருகையைத் தேடுவாய்
என்னைப் போன்று
பலர்—
போகலாம், வரலாம்
அவர்களில்—
என்னைப் பார்.

●

இதே போன்று
எங்கோ ஒரு தாய்
என்னில் தனது
மகனைக் காணலாம்!

●

இதுவே இன்று
எம்மண்ணின் நிலமை.

●

அம்மா!
என் மோதிரமும் கடியாரமும்
மேசையில் இருக்கிறது;
கவனமாக எடுத்து வை.
சிலவேளை அதுவே
என்—
ஞாபகச் சின்னமாகலாம்.

●

தங்கையிடம் சொல்
அவளோடு அடிக்கடி
சண்டை பிடிக்கும் அண்ணன்
அந்நியரோடு
சண்டை பிடிக்கப்
போட்டான் என்று...

●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அக்காவின் பிள்ளைக்கு
நீ எனக்கு முன்பு
வாங்கித் தந்த
விளையாட்டுத் துப்பாக்கியை
என் சார்பில்
கொடுத்துவிடு...
அவனும் அதைக்
கையாளப் பழகட்டும்...

●

அம்மா!
அழுகிறாயா? வேண்டாம்.
நான்—
மீளவில்லை யெனில்
என் படத்திற்கு ஒரு
முத்தம் கொடுப்பாயல்லவா?
ஏனெனில் என்றுமே
நான் உனக்குக் குழந்தைதான்...

●

பிறந்த மடியைப் பிரிந்தபோதும்
தவழ்ந்த மண்—எனைத்
தழுவிக் கொள்ளும்

●

பத்து மாதம் தாங்கிய வயிறா?
இருபது வருடம் ஏந்திய நிலமா?
இதுவே இன்றென் இதயக் கேள்வி.

●

பாலில் வீரம் பருக்கிய தாயே!
என்—
பாதை தவறா?
நீயே யோசி.

காலம் உதிரும்
கண்ணீர் மறையும்
வரலாறாய் என்
வாழ்வும் தொடரும்

●

எனக்கும் உனக்கும்
உள்ள உறவு
தொப்பூள் கொடியுடன்
அறுந்து போக...
மண்ணுக்கான
எந்தன் உறவோ
புதைகுழி வரையும்
போகும் பாராய்!

●●


**லண்டன் திரையில் விரைவில் ஒரு வித்தியாசமான திரை முத்து!**

"கனவுகளில் பல கல்யாணங்களாக முடிகின்றன!
கல்யாணங்களில் சில கனவுகளாகக் கலைகின்றன!!"

ஒவ்வொரு பெண்ணும் நிட்சயமாகப் பார்க்கவேண்டிய திரைச்சித்திரம்

ஷான்ஸ் இன்டர்நாஷனல் வழங்கும்



ஈழத்துக் கலையுலகப் படைப்பை
தமிழகக் கலைஞர்கள் மெருகூட்டுகிறார்கள்!

**கல்யாண கனவுகள்**

கதை: K.S. துரை

பாடல்கள்: கவியரசு வைரமுத்து

பாடியவர்கள்: எஸ். பி. பாலு, ஜெயச்சந்திரன், சுவர்ணலதா, மலே. வாசுதேவன்

திரைக்கதை, வசனம், இசை, தயாரிப்பு, இயக்கம்:
**டென்மார்க் ஷான்**




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இங்கேயும் ஒரு கண்ணகி

**சி.கர்ணன்**

வானம் இன்று ஏன் இப்படி இருக்கிறது? இன்று சூரியனுக்கு விடுமுறையா? இல்லை, இவர்கள் செய்யும் அழிவுகளை பார்க்கப் பொறுக்காமல் ஓடி ஒழிந்து விட்டானா?

நாய்கள் ஊழையிடுவதும், குரைப்பதுமாகத் திரிந்தன. காகங்கள் நரமாமிஷம் உண்ணப் போகின்ற சந்தோஷத்திலோ, என்னவோ..அங்குமிங்குமாகக் கரைந்து திரிகின்றன.

இடை விடாத குண்டுச் சத்தமும், ஷெல்களும், துப்பாக்கி வேட்டுக்களும் கேட்டுக்கொண்டே இருந்தன. இலங்கை அரசின் காடைத்தனம் கட்டவிழ்த்துவிடப் பட்டிருந்தது. ஆம், தமிழீழத் தாய் தமிழ் இரத்தங்களால் குளிப்பாட்டப் பட்டுக்கொண்டிருக்கிறாள்.

மக்கள் உரப்பைகளுக்குள் தமக்குத் தேவையான அவசரப் பொட்களை போட்டுக் கொண்டு சொந்த மண்ணில் அகதிகளாக ஓடுகின்றனர்.

'ஐயோ வயல் கிணற்றில் தண்ணி அள்ளப் போன பெட்டையைக் காணவில்லை...' என்று தலையில் அடித்தபடி சரசக்கா ஓடி வந்தா. கந்தண்ணரோ, 'அட மேனை மோது வைத் தாண்டி.. கொம்பிருளக் காட்டுக்குள்ளே விழுந்தம் எண்டால் அங்காலை வரணி. கெதியாய் நடவுங்கோ' என்று தனது அவசரத்தைக் காட்டிக்கொண்டிருந்தார்.

பொன்னு வாத்தியாற்றை சேகர் 'ஆமி காம்பிலிருந்து தான் ஷெல் அடிக்கிறாங்கள்... வைரவகோயில் சந்தியில சென்றிக்கு நிண்ட பொடியள் சொன்னவங்கள்...' என்றபடியே தனது சைக்கிளையும் உருட்டிக் கொண்டு தன் பாட்டில் போய்க் கொண்டிருந்தான். சனம் அல்லோல கல்லோலப்பட்டாலும் கூட செல்வி எதுவித பயமோ, படபடப்போ இல்லாமல், தலைமாட்டிலிருந்த வெற்றிலைத் தட்டிலிருந்து பாக்கு வெற்றிலையைப் போட்டுக் கொண்டு, மாலுக்குள் இருந்த பன்னாடையை எடுத்துக் கொண்டு, தேனீர் தயாரிப்பதற்காக அடுப்பைப் பற்ற வைத்தாள்.

-ஓடுகின்ற அவசரத்தில் கூட எம்மவரில் சிலர், எங்கடை சோத்தையும் திண்டுவிட்டு, அடுத்த வீட்டுக்கதைகதையாமல் போக மாட்டார்களே! ஒரு அவிள் சோறு கிடைத்தாலே போதுமே! அன்றை பொழுது இன்பமாகக் கழியுமே! அவர்களுடைய வாய்க்குச் செல்வி என்ற பொரியும் தப்பவில்லை....

'அட லட்சுமி! என்ன உதுக்குள்ளே புகையுது..செல்வி போகேல்லையா?' அவளுக்கு என்ன புருஷனைத் தின்னக் கொடுத்திட்டு எத்தனை பொடியளை வைத்திருக்கிறாள்... அப்படியே ஆமிக்காரனையும் வளைச்சுப் போடமாட்டாளே...' - அவலத்தின் மத்தியிலும் இப்படி 'அவலங்கள்'.



இந்த சொல்லம்புகள் அவளது காதுகளில் விழாமலில்லை. ஆனாலும் அந்த வார்த்தைகள் அவளது இதயத்தை ஊடறுக்க முடியவில்லை. அவ்விதமான வார்த்தைகள் அவளுக்குக் கேட்டுக் கேட்டு மரத்து விட்டன. ஆனாலும் கண்களிலிருந்து கசிந்த கண்ணீரைத் தடுத்து நிறுத்த மட்டும் அவளுக்குச் சக்தியில்லை. அவளும் ஒரு பெண்தானே.

எண்பத்தேழில் வடமராட்சியில் ஒப்பரேஷன் நடந்தபோதுதான் செல்விக்குத் திருமணம் நடந்தது. வறுமை என்பது தெரியாமல் வளர்ந்தவள். திருமணத்தின் பின், மணமக்கள் ஊர்வலம் நடந்தது. எவருமே எதிர்பாராத கொடுமை அப்போதுதான் நடந்தது. எங்கோ இருந்து வந்த ஷெல் மணமக்களையா தேடி வரவேண்டும்? அப்படித் தேடி வந்த ஷெல் அவளை விதவையாக்கி விட்டு, அவளை அபலையாக்குமென்று, அவள் கனவிலும் எதிபார்க்கவே இல்லை.

மண ஊர்வலம் மரண ஊர்வலம் ஆகியது.

அவள் கதறி அழுதாள்; கதறினாள்.

'புது வாழ்க்கைக்கு என்று கூட்டி வந்து விட்டு என்னை நடு வழியில் கைவிட்டு விட்டு, இப்படிப் போய்விட்டீர்களே!' எவ்வளவோ கனவுகளைச் சுமந்து கொண்டு, உங்களோடு வாழ வந்தேன். அத்தான் நான் என்ன செய்வேன்? என்ன செய்வேன்?..ஐயோ! ஐயோ!..'

இத்தனை நாளும், வாழ்க்கையின் மறுபக்கம் செல்வி அனுபவித்தது கிடையாது. இப்போது ஏற்பட்டது தான் அவளுக்குப் பயங்கரமான அனுபவம்.

'அட கடவுளே! ஒரு நாளாவது இந்தப் பிள்ளை சந்தோஷமாக வாழ விட்டிருக்கக் கூடாதா? இந்த ஊரிலை எத்தனை வாழ்ந்து அனுபவித்த கிழடு கட்டைகள் இருக்கிறார்கள்! அவர்களை எல்லாம் வாழ விட்டுட்டு, இந்தப் பிள்ளையின்ரை வாழ்க்கையயா பறிக்க வேண்டும்?' ஊரவர்கள் இப்படி அவளுக்காக அழுதார்கள்.

தனது கணவனுடன் ஒரு நாள் கூட வாழாவிட்டாலும், அவளால் மீண்டும் ஒரு வாழ்க்கையை சில காலத்தின்பின் பெற்றார் விரும்பியது போல அமைத்துக் கொள்ள மனம் மறுத்துவிட்டது. பெற்றாருடன் ஏற்பட்ட மனமுடைவினால், தனித்து இந்தக் கொட்டிலுக்கு வந்து விட்டாள். அது ஒரு சிறு மால்.

அவளை ஊரவர்கள் 'கொட்டிலக்கா' என்று இப்போது அழைக்கிறார்கள். ஆனாலும் மனித வாழ்வில்தான் எத்தனை எத்தனை மாற்றங்கள்? செல்வியின் 'நடத்தையில்' திடீர் மாற்றங்கள். என்னதான் நடந்ததோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செல்வி அப்பம் சுட்டு விற்று தன் வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருந்தவள். அப்பம் சுடுவதை நிறுத்தினாள். மாலை என்றாலும் எங்கேயோ வெளிக்கிட்டுச் செல்கிறாள். நேரம் கெட்ட நேரத்திலே வீடு திரும்புகிறாள். இது வழக்கமாகி விட்டது. ஊரவர் வேவு பார்த்தில் பல விஷயங்கள் அம்பலத்துக்கு வருகின்றன. செல்வி வயலைத் தாண்டி, அந்த முருகன் ஆலய அலரி மரத்தடியில், ஒரு பொடியனோடு கதைத்துக்கொண்டிருப்பதாக செய்தி பரவியது.. தொடர்ந்து ஊரவரின் பேச்சுக்கு செல்வி இலக்கானாள்...

ஆனால், செல்வி கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. இன்னும் எத்தனையோ கதைத்தார்கள். நாட் செல்லச் செல்ல செல்வி போவதை நிறுத்திக் கொண்டாள். இப்போது பொடியள் வீட்டுக்கே வரத் தொடங்கிவிட்டார்கள். பெட்டையளும் அவளது வீட்டுக்கு வரத் தொடங்கினார்கள். இரவில் துள்ளலும், குதித்தலும் சர்வ சாதாரணமாகிவிட்டது. 'தான் பெடியளோடு ஆடுறது பத்தாது என்று இப்போது பெட்டையளையும் கூட்டிக் கொடுக்கத் தொடங்கி விட்டாளே!' என்று ஊரவர்கள் கதை கதையாகக கதைக்கத் தொடங்கினார்கள். 'இவளை இனி விட்டால் எங்கள் இனத்துக்குத்தான் கூடாது. பொடியளிட்டை சொல்லி, நடுச்சந்தியிலை கட்டி வைச்சுச் சுடவேணும்' என்று சிலர் சபதம் எடுத்தனர். 'அப்படிச் செய்தால்தான் மற்றதுகளுக்கும் புத்தி வரும்' என்றார் இன்னொரு 'புத்திஜீ'.

'சின்ன வயதிலை புருஷனை இழந்தவள், பெற்றார் சொன்னபடி கட்டிக் கொண்டு வாழ்ந்திருக்கலாம். இப்ப இப்படி நடக்குது' என்று கவலைப்பட்டார் ஒருவர்.

> மாயையில் எங்கோ
> வெளியே போகிறாள்.
> நேரம் கெட்ட நேரத்திலே
> திரும்புகிறாள்....
> வயலைத் தாண்டி,
> முருகன் கோயில் அலரி
> மரத்தடியில்
> ஒரு பொடியனோடை
> கதைக்கிறாள்...
> ஊரவர் வேவு பார்த்ததில்
> பல விஷயங்கள்
> அம்பலத்துக்கு
> வந்தன....

அவள் இவற்றை எல்லாம் எண்ணி அழுகிறாள் இப்போது...

தேனீர் குடிப்பதற்காகப் புகைந்து கொண்டிருந்த அடுப்பில், சிறிது எண்ணையை ஊற்றிப் பற்றவைத்தாள்.

'இந்தப் பாழாய்ப் போன சனம், கண்ணால் காணாமலே காது மூக்கு வைத்து என்னத்தை எல்லாம் பேசுதுகள்' என்று தனக்குள்ளே குளறுகிறாள்.

இல்லை....

இந்த உலகம் இன்றாவது உண்மையை உணரப்போகிறது என்பதை நினைத்து அவளது மனம் ஆனந்த ஓலமிட்டது.

ஆனந்தக் கண்ணீர் வடித்தது.

அவள் தன் கணவனின் படத்தை எடுத்து ஆரத் தழுவி முத்தமிட்டு, அவனோடு மௌனமாகப் பேசினாள். 'அத்தான்! இந்த ஊர் என்ன பேசினாலும் பேசட்டும்! நான் உங்களைத் தவிர வேறு யாரையும் நினைத்துப் பார்த்தது கூட இல்லை. என் வாழ்வே நீங்கள்தான். அதனால்தான் பெற்றோர்கள் வேறு திருமணம் பேசியபோது, மறுத்துத் தனியனான வந்தேன். உங்களோடு நான் வாழ்ந்தது கிடையாது. ஆனால் நான் வாழ்ந்து கொண்டிருப்பது என்றுமே உங்களோடுதான். அத்தான்! நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் பொடியள், பொட்டையளோடை தொடர்பு வைத்திருந்தது உண்மைதான். உங்களை இழந்த பின்னர் நாட்டு விடுதலையே எனது குறிக்கோளாகியது. அதுதான் இரகசியம். நான் உங்களிடம் வருவதற்கு முதல் ஆசை தீர முத்தம் ஒன்று தருகிறேன் அத்தான்!'

அவளுக்கு இப்போது பாரம் ஒன்று நீங்கிய உணர்வு.

வெடிச் சத்தம் இன்னமும் ஓய்ந்த பாடில்லை. சனம் கால் போன போக்கில் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால்....

செல்வி மட்டும் நிதானமாக ஒரு பெட்டியைத் தூக்கியபடியே நடக்கிறாள். எல்லாரும் உயிரைக் காக்க ஓடும்போது, செல்வி மட்டும் ஒரு திசையைக் குறி வைத்து நடக்கின்றாள்...

இப்போது செல்வியை தெரியவில்லை.. ஒரு உருவம் மட்டும் அசைவது தெரிந்தது. திடீரெனச் செல்வி போன திசையிலே பலத்த சத்தம். அங்கு மிங்குமாகச் சிதறி ஓடிய சனங்கள், நின்று அவதானிக்கத் தொடங்கினார்கள்.

ஆம், கற்றுக்கூட வீச மறுத்து விட்டது. செய்தி வேகமாகப் பரவி விட்டது.

செல்வி மனிதக் குண்டாகச் சென்று தன் லட்சியத்தை நிறைவேற்றி விட்டாள்.

அவள் தன் நாட்டுக்கு தன்னை அர்ப்பணித்து, மாவீரர் பட்டியலில் சேர்ந்து விட்டாள்.

மக்கள் அவளுக்குத் திரண்டு வீர அஞ்சலி செலுத்தினார்கள்.

'கொட்டிலக்கா' -தாசி என்றும், வேசி என்றும் சொன்னவர்கள் தமிழினத்தைக் காக்க வந்த தியாகி என்று இப்போது போற்றினார்கள்.

அலரி மரத்தடியில் பெற்ற போதனைகளும், குளத்தடியில் பெற்ற பயிற்சிகளும், இரவு நேரங்களில் அவள் பெற்ற விடுதலை சம்மந்தமான தெளிவுகளுமே அன்று அவளை ஊர் மக்களிடம் வேசியாக்கியது.

ஆனால் இன்று-

செல்வி பட்ட கஷ்டங்கள் என்ன என்பது ஊர் மக்களுக்குப் புரிந்தது.

தனது கணவனை பழிவாங்கிய ராணுவத்தை அழிப்பதற்கு அன்றே திட்டமிட்டு மனிதக் குண்டாகி, ஒரு கண்ணகி ஆக தன்னை காட்டிவிட்டாள் செல்வி.


அன்று செல்வி மட்டும் சென்று வந்த குளத்தடிக்கு இன்று பல நூறு யுவதிகளும், இளைஞர்களும் செல்கின்றனர்-அவள் விடுதலைக்கு வழிகாட்டிய வீராங்கனை!000000000



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





அறிவிப்பாளர் அப்துல் ஹமீத்துடன் கட்டுரையாளர் வீணைமைந்தன்.

# தமிழகம் மதிக்கும் 'அமுதக் குரலோன்'

வெள்ளைக்காரன் கொள்ளையடித்த நகரங்களுள் சென்னையும் ஒன்று. 16ம் நூற்றாண்டில் கிழக்கிந்திய கொம்பெனியிடம் சிக்கிய துறைமுகப் பட்டினம். பல்லாயிரம் வாணிப-கலாசாரக் கற்பழிப்புக்களுப் பின்பும் சிரித்துக் கொண்டும்- அழுது புலம்பிக் கொண்டும் அரசியல் கோஷங்களை முழங்கிக் கொண்டும்- ஜீவனம் செய்யும் திராவிடக் கலாசார அங்காடி நகரம்.

மோகனமும், முகாரியும் முத்தமிடும் வித்தியாசமான பட்டினம். வங்கக் கடலலைகளின் பேரிரைச்சல்களைத் தோற்கடிக்கும் மனிதக் கூச்சல்கள் மலிந்த நகர்.

மார்வாடிகளிடம் அடமானம் வைக்கப்பட்ட சென்னையின் சீர்வரிசைகளும், சீதனங்களும் தமிழர்களைவிட்டு வெகுதூரம் போய்விட்டன.

சென்யயில் வாழ்பவர்கள் தமிழ் மொழியைக் கற்றுக் கொள்ள பள்ளிளை தேடிப் போகத் தேவையில்லை. குழந்தைகளுக்குக் கற்பலகை- கரும்பலகை வேண்டியது இல்லை.

ஆசிரியர்கள் 'சோக்' துண்டும், பிரம்பும் எடுத்துச் செல்லத் தேவையில்லை.

சென்னை நகரின் வீட்டு மதில்கள்- தெருவோரச் சுவர்கள் யாவும் தமிழ் எழுதும் கரும்பலகையாகும். பிற்காலத்தில் தமிழ்நாட்டுப் பிள்ளைகள், இப்படித்தான் தமிழ் அறிவார்கள் என்பதை மனதில் கொண்டுதான் போலும் அமரர் பாரதியார் 'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்திடல் வேண்டும்' என்று பாடிச் சென்றாரோ!

எது எப்படி இருந்தாலும் நம்மவர் ஒருவரின் வானொலி குரலோசை அலை கடந்து- மலை கடந்து- மனங்கவரும் தமிழாக- மணம் கமழும் தமிழாக தமிழக மக்களைக் காதுகொடுத்துக் கேட்க வைக்கிறதென்றால்- அப்பப்பா! அந்த அற்புத புருஷருக்கு அங்குள்ள மதிப்பையும் மரியாதையையும் கண்டு உள்ளம் பூரித்தேன். நினைத்தாலே நெஞ்சம் இனிக்கிறது.

'வீட்டுக்கு வீடு, பாட்டுக்குப் பாட்டு' என்ற திரை இசை நிகழ்ச்சியை தமிழகத்தில் அறிமுகம் செய்து வைத்த அருமை நண்பர் அப்துல் ஹமீத் அவர்கள் வானொலி ரசிகர்களின் கனவுக் கதாநாயகன்.

படிப்பறிவு இல்லாதவர்களும்- பள்ளி செல்ல வாய்ப்பில்லாதவர்களும் பட்டி தொட்டி எங்கும் வாழ்பவர்களும் தமிழ் மொழியை பாடல் வரிகளாகப் படிக்கிறார்கள் என்றால் அதற்கு ஆசான் அப்துல் ஹமீத் அவர்களே காரணமாக இப்போது இருக்கிறார் என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை.

திருநெல்வேலி மாவட்டத்தில் தென் பொதிகைச் சங்கம் என்ற அமைப்பு 'அமுதக் குரலோன்' எனும் புதிய நாமத்தை அவருக்கு வழங்கிக் கௌரவித்தமை நம்மவருக்குக் கிடைத்த தமிழ் மரியாதையாகும்.

மதுரை மாவட்டம் இராஜதானிக் கோட்டையிலிருந்து, ஒரு வானொலி ரசிகர் பத்தாயிரம் ரோஜா மலர்களைக் கொண்டு, மாலை தயாரித்துச் சுமந்து வந்து ஹமீத் அவர்களுக்கு அணிவித்தபோது தமிழ் அன்னையின் ஆனந்தக் கண்ணீரை அவர் விழிகள் பனித்து நின்றன.

அருமை நண்பர் அப்துல் ஹமீத் அவர்களுடன் சென்னையில் தங்கியிருந்த வேளை அண்ணா கலையரங்கிலே அவர் தொகுத்து வழங்கிய லலிதா நகை மாளிகையினரின் 'பாட்டுக்குப் பாட்டு' நிகழ்ச்சி தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெற்றன.

இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும், இந் நிகழ்ச்சியில் கலந்து கொள்ள பலர் வந்திருந்தனர். திறமையும் ஆர்வமும் மிகுந்த குளியலறைப் பாட்டுக்காரர்களை வெளிச்சத்துக் கொண்டு வரும் வினோதமும் வேடிக்கையும் நிறைந்த நிகழ்ச்சி இது.

'எனக்குப் பாடுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. உங்களை ஒரு முறை நேரிலே பார்த்தாலே போதும்' என்று ஆவலுடன் துபாய் நாட்டிலிருந்து வந்திருந்தார், அங்கு பணிபுரியும் ரசிகர் ஒருவர். நம்மவரின் வானொலித் தமிழுக்குத்தான் எத்தனை பெருமை!

> நம்மவர் ஒருவரின்
> வானொலி குரலோசை
> அலை கடந்து மலை
> கடந்து தமிழக மக்களைக்
> காது கொடுத்துக் கேட்க
> வைக்கிறது என்றால்
> -அற்புதம் அற்புதம்.....

ஒவ்வொரு அரை மணி நேரப் பாட்டுக்குப் பாட்டு நிகழ்ச்சிக்குப் பின்பும் கலை உலகின் பிரபலங்களும் அந்தக் காலப் பாடல்குரல் நட்சத்திரங்களும் மேடையில் தோன்றுவார்கள்.

அந்த வரிசையில் நான் பிரமித்த பாடகி திருமதி யு.ஆர். சிவரத்தினம் அவர்கள். அவரைப்பற்றி அடுத்த இதழில் எழுதுகிறேன்.

**-வீணைமைந்தன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# LAW OFFICES



## யசோ சின்னத்துரை
பரிஸ்டர், சொலிசிற்றர் & நொத்தாரிஸ்

## YASO SINNADURAI
Barrister & Solicitor, Notary Public

**SCARBOROUGH OFFICE**
2555 Eglinton Ave. E., Suite 204
Scarborough ON M1K 5J1
(Eglinton at Midland)

**TEL: (416) 265-3456**
FAX: (416) 265-2770

**MISSISSAUGA OFFICE**
3038 Hurontario St., Suite 203
Mississauga ON L5B 3B9
(North of Hwy 5 on Hwy 10)

**TEL: (905) 306-1100**
FAX: (905) 306-0594

**Attorney - At - Law, Sri Lanka and Solicitor, England.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தலை உள்ளம் கொண்ட பாலன்



தினகரனில் பணியாற்றிய காலத்தில் கொழும்பில், தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அலுவலகத்தில் அப்போது வி.கே.ரீ. பாலனை முதலில் சந்தித்தேன். அவரை எனக்கு அப்போது அறிமுகப்படுத்தி வைத்தவர், தமிழ் கலை இலக்கிய உலகம் நன்கு அறிந்த அந்தனிஜீவா. இலங்கைத் தமிழ் நாடக, சினிமா உலகத்துக்கு பாலன் ஆற்றிய பங்களிப்பைப் பற்றி அந்தக் காலத்தில் எழுதியிருக்கிறேன். கலைத்துறையை உயிராக நேசித்த அவர் கலை உலக நண்பர்களை இதயத்தில் சுமக்கும் இனியவர் இலங்கையில் கலாசார அமைச்சின் நாடகப் பிரிவின் கௌரவ செயளாளராக அவர் அமர்ந்து, கலைப்பணி புரிந்த நினைவுகளை மறக்க முடியாது. இப்போது அதே பாலன் தமிழ் நாட்டில் செல்வாக்குள்ளவராக இருப்பது நமக்கெல்லாம் பெருமையே. 'மயூரா' ட்ரவல்ஸ் என்ற நிறுவனத்தை மிகத் திறம்பட நடாத்தி வருகிறார். சென்னையில் பாலன் வெளிநாடுகளில் இருந்து செல்லும் நம்மவர்களுக்கு, தம்மான உதவிகளைச் செய்யத் தவறுவதில்லை. சமீபத்திலே கனடாவில் வாழும் இலக்கிய அன்பர் கே.ரீ. சண்முகராஜா தமக்கு பாலன் செய்த உதவிகளை நன்றியுடன் நினைவு கூர்ந்தார். லண்டனிலிருந்து பிரபல நாடகக் கலைஞரும், பிபிஸி நிறுவனத்தைச் சேர்ந்தவருமான தாஸிஸியஸ் தலைமையில் 'களரி' நிர்வாகக் குழுவினர் தென்னிந்திய கலைப்பயணம் ஒன்றை மேற்கொண்டு, ஆகஸ்ட் நடுப்பகுதியில் செல்கின்றனர். இவர்களின் தமிழக உள்ளூர் பயணப் பொறுப்பை வி.கே.ரீ. பாலன் முழுமையாக எடுத்திருக்கிறார். நாடு விட்டுச் சென்றாலும், நம்மை மறக்காத நம்மவரும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

பாலனின் இந்தப் பெருந்தன்மையைப் பற்றித் தாஸிஸியஸ் 'களரி உறுப்பினர்கள் அனைவருமே இங்கு அகதிகளாக ஓடிவந்தவர்கள். பாலனின் பேராதரவு களரி உறுப்பினர்கள் ஒவ்வொருவரது நெஞ்சையும் நிறைக்கிறது' என்கிறார்

## 'கலைவிளக்கு' பாக்கியநாதன்

ஜெர்மனியில் 'கலை விளக்கு' என்றால் அது ஒருவரைத்தான் குறிக்கும். ஜெர்மனி, டோட்மண்ட் என்ற இடத்தில் வாழும் நம்மவரான பாக்கியநாதன், 'கலை விளக்கு' சஞ்சிகையையும், அதே பெயரில் வீடியோ சஞ்சிகையையும் நடாத்திவருகிறார். இவரைப் போலவே இவரது மனைவியும் பல்கலைக்கழகப் பட்டதாரி. 1984இல் 'சிந்திக்க வைக்கும் ஜெர்மன் கலாசாரம்' என்ற நூலை எழுதி, ஜெர்மனியிலும், யாழ்ப்பாணத்திலும் வெளியிட்டார்.



தாம் வாழும் டோற்மூண்ட் பகுதியிலே ஒரு தமிழ் பாடசாலையைப் பலருடன் சேர்ந்து உருவாக்கியவர்களில் பாக்கியநாதன் தம்பதியரும் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். திருமதி விக்னா பாக்கியநாதன் அன்றிலிருந்து இன்றுவரை இங்கு கல்வி கற்பிக்கிறார். இப்போது இப்பாடசாலை டோற்மூண்ட் கரிதாஸ் தமிழ் பாடசாலை என்று பெயர் மாற்றம் பெற்றுள்ளது. ஏழிசை வித்தியாலயம் என்ற இசைப் பாடசாலை அமைய முன்னின்றவர்களில் இந்தத் தம்பதியரும் முக்கியமானவர்கள். டோற்மூண்ட் உள்ளூா தொலைக் காட்சியில் வாரா வாரம், கலைவிளக்கு வீடியோ மகசின் என்ற பெயரில் தமிழடக் கல்வி, கலாசார, சமய நிகழ்ச்சிகளை ஒளி பரப்பி வருகிறார்கள். கவிதை, கட்டுரை, சிறுகதைத் தொகுப்பு நூல், இலக்கண விளக்கம், இன்னும் பல்வேறு துறைகளிலும் பாக்கியநாதன் தம்பதியர் பல நூல்களைஎழுதியுளனர். 'ஈழத்திலுள்ள எமது சொந்தங்கள் படுகிற துயரங்களுக்கு முடிந்தளவு நம்மாலான பணிகளைச் செய்கிறோம்' என்று இந்தத் தம்பதியினர் அடக்கமாகச் சொல்கின்றனர்.



## 'குட்டித்தமிழீழ'த்தில் துடிப்பான இளைஞர்

'இத்தனையும் செய்கின்ற இவரா இந்தச் செந்தி?' என்று அதிசயிப்பீர்கள்ஆளைப்பார்த்தால். மிக இளம் வயதில் சாதிக்கிறார். 'தமிழன் வழிகாட்டி' என்ற தொலைபேசித் தொகுப்பை கனடாவில் இலவசமாக மக்களைக் கேட்கவைத்த பெருமை இவரைச்சாரும். தமிழில் முதலாவது 24 மணிநேர தொலைபேசித் தொகுப்பு இது. கனடாதமிழ் மக்ளுக்குத் தேவையான வர்த்தக ஸ்தாபனங்களிடமிருந்து பல தகவல்களை அறியவும்,, மணமகன்-மணமகள் சேவை, கோயில்களின் தொலைபேசி இலக்கங்கள், தமிழ் விழாக்கள், விளையாட்டு நிகழ்ச்சிகள் போக்குவரத்து வேலை வாயப்புபோன்றவற்றையும், உலகின் எந்த மூலையில் இருந்தாலும் தமிழ் மக்கள் சம்மந்தப்பட்ட செய்திகளையும் இந்த தொலைபேசித் தொகுப்பில் செல்லையா செந்திலாதன் தருகிறார். ஆதவன் பப்ளிக்கேஷன்ஸ் சார்பில் செந்தியின் மற்றொரு படைப்பு 'தமிழன் வழிகாட்டி' தகவல் நூல். இந்த இலவசமான இந் நூல் கனடிய தமிழ் மக்களுக்குப் பயனுள்ள தகவல்களைக் கொண்டிருக்கிறது.

உதயன் பத்திரிகைகள் ஆசிரியர் லோகேந்திரலிங்கம் தமக்குத் தருகின்ற ஆதரவும் தமது வெற்றியின் ரகசியத்தில் ஒன்று என்கின்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# M.K.SRI & CO

**SOLICITORS**
**ADMINISTRATORS OF OATHS**

**5, EAST COTE LANE,**
**SOUTH HARROW,**
**MIDDX HA2 8BW**

**TEL: 081 423 2141**
**FAX/TEL: 081 248 3383**

**PARTNERS:**
*M.K.Sritharan*
*N.Krishnarajah*

**We Specialise in:**
***IMMIGRATION * CRIME**
*** CONVEYANCING * MATRIMONIAL**
**STATE BENEFITS * TRAFIC OFFENCES**
*** ADVICE**
**&**
**ASSISTANCE AT POLICE**

**LEGAL AID WORK**
**UNDERTAKEN**



## லண்டனில் விரைவில்

ராகினி ராஜகோபாலின்
**'லண்டன் நாட்டியாலய'**
**தயாரித்து வழங்கும்**




***இளைய நாட்டிய தாரகை ஷர்மினி யின்***
**பரதநாட்டிய நிகழ்ச்சி**

***உயிரூட்டும் முன்னணிக் கலைஞர்கள்***
மாதினி சிறிக்கந்தராசா, முத்து சிவராஜா,
.கோதண்டபாணி, ஞானவரதன் , சிதம்பரநாதன்




கலைக்காவலர் சிவனடியான் ஸ்ரீபதி தலைமையில் ஜெர்மனியில் இயங்கும் பிராங்பேட் தமிழ்மன்றம் நல்ல பல பயனுள்ள விஷயங்களை செய்துவருகிறது. புலம் பெயர்ந்து ஐரோப்பா நாடெங்கும் சிதறி வாழும் தமிழீழ உதைப்பந்தாட்ட வீரர்களை மனதில் கொண்டு, தமிழீழ ஐரோப்பிய வெற்றிக்கிண்ணத்துக்கான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை சமீபத்தில் தமிழ்மன்றம் நடாத்தியது. பிராங்பேட் நகரில் இரண்டு முழு நாட்கள் நடை பெற்ற இப்போட்டியில் எட்டு அணிகள் பங்கு கொண்டன. டென்மார்க் விளையாட்டுக் கழகம் சாம்பியன் வெற்றிக் கிண்ணத்தையும், 50 ஆயிரம் ரூபாய் (இலங்கை)ரொக்கப் பரிசையும் தட்டிக் கொண்டது. இரண்டாவது இடத்தை பாரிஸ் சென்ற். அந்தனிஸ் (பாஷையூர்) பெற்றுக் கொண்டது. பாக்னாங் விளையாட்டுக் கழகத்துக்கு மூன்றாம் இடம் கிடைத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# பதின்மூன்று வயதில் பட்டதாரிகள்

பதின்மூன்று வயதிலேயே பட்டதாரிகளாகி விடுகிறார்கள். உண்மையாகத்தான்! இந்தப் பட்ட மளிப்பை நேரில் பார்த்து ஆச்சரிய ப்பட்டுப்போனேன். பல்கலைக் கழகத்தில் எப்படிப் பட்டமளிப்பு நடக்கிறதோ அதே மாதிரி!

ஒருவரோ, இருவரோ என்றால் அது தனித்துவமான திறமை சாலிகள் என்று நினைத்துக் கொள்ளலாம்.

சமீபத்தில் கனடாவில் ரொறொன்ரோவுக்குச் சென்றிருந்த போது, உறவினர் ஒருவருடைய வீட்டில் தங்கியிருந்தேன். தங்களது மகளுக்கு அடுத்த இரு நாட்களில் பட்டமளிப்பு நடைபெற விருப்ப தாகச் சொன்னார்கள். 'அவளுக்குப் 13வயது தானே! அதற்குள் Gradugaetion என்று கேட்டேன். 'நேரில் வந்து பாருங்கோ. நீங்களும் வாறதென்றால் முன் கூட்டியே அனுமதி பெறவே ண்டும்' என்றார். சம்மதித்தேன்.

பல்கலைக்கழக பட்டமளிப்பு மண்டபம் போலவே அந்தப் பாடசாலையின் அந்தபட்டமளிப்பு மண்டபமும் அமைந்திருந்தது. எங்களுக்கு என்று ஒதுக்கப்பட்ட ஆசனங்களில் அமர்ந்து கொண்டோம்.

மாணவ,மாணவிகளாக பட்டம் பெறுவோர் 56பேர் வரிசையாக வந்து பட்டதாரிகளுக்கு என்று ஒதுக்கப் பட்ட ஆசனங்களில் அமர்ந்தார்கள்.

பாடசாலை அதிபர், 'பட்டதாரிகளே!' என்று விழித்து தம் உரையை நிகழ்த்தினார். இப்படியே திறமையானவர்கள் என கணிக்கப் பட்டவர்களுக்கு சிறப்புப் விருதுகள் வழங்கப்பட்டன. தமிழ் மாணவர்கள் மூவர் இப் பட்டதாரிகளில் இருந்தார்கள். வேணி வேலாயுதம் என்ற சிறுமி அந்தப் பட்டதாரிகளில் இரண்டாவது இடத்தைப் பெற்றுக் கொண்டது சிறப்பாக இருநதது. இறுதியில் அனைத்து மாணவர் களுக்கும் பட்டதாரிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஈற்றில் பெற்றார்கள், உறவினர் களுடன் ஆசிரியர்கள் பிள்ளைகள் ஒன்று கூடி, சிறிய விருந்துபசாரம் நடந்தது. இதனை அடுத்து ஒருமணிநேரம் இரவு நடனம் 'குட்டி'ப் பட்டதாரிகளுக்கு என்று ஒதுக்கப் பட்டிருந்தது.

அந்தப் பட்டமளிப்பில் கலந்து கொண்ட மூன்று மணிநோத்தில் உண்மையான விளக்கம் எனக்குக் கிடைத்தது.

எட்டாம் வகுப்பு முடிந்து அடுத்த கல்லூரிக்கு உயர்வகுப்புக்குச் செல்கிறார்கள். பாடசாலை மாறும் போதே அந்த எட்டாம் வகுப்பு பட்டமளிப்பு நடைபெறுகிறது. ஆறாம் வகுப்பிலிருந்து வேறு பாடசாலைக்குச் செல்லும் போதும் இப்படியான பட்டமளிப்பு நடை பெறுமாம். கனடாவின் பாடசா லைகள் எதிர்காலத்தில் மாணவர் களை பக்குவப்படுத்தி தயார் படுத்துவதற்காகவே இப்படியான பட்டமளிப்பைச் செய்கிறார்களாம்.

நான் சென்ற பட்டமளிப்பு நடந்த பாடசாலை: Emily Carr Public School. மண்டபத்துக்குள் இன்னொரு விசேஷத்தையும் பார்க்கக் கூடியதாக இருந்தது.



இலங்கையைச் சேர்ந்த பட்ட தாரிகள் தங்கள் எண்ணத்துக்கு ஏற்ற முறையில் வரைந்த சின்னங்களை மற்ற மாணவர்களது சின்னங்களுடன் வைத்திருந்தது மட்டுமல்ல, ஒரு மாணவர் புலியையும் சின்னமாக வரைந்திருந்தது பெருமையாக இருந்தது. *தகவல்: கோகிலா*



சிறப்பு விருது பெறும் செல்வி வேணி வேலாயுதம்பிள்ளை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



-வீ.ஸ்ரீநிவாசன்-

# இம்மாத பலன்

## ஆகஸ்ட் 1996

## மேடம்

மேஷ ராசியைச் சேர்ந்தவர்களுக்கு இது ஒரு சுப்பரான காலமாகும். கிரகங்களின் சூழற்சி மிகவும் அனுகூலமாக காணப்படுவதால் எக்காரியத்திலும் தங்கு தடை இன்றி நிறைவேறும். பணம் பலவழிகளிலும் வந்த வண்ணம் இருக்கும். தொழிலில் முன்னேற்றம், ஆதாயம் இருக்கும். கணவன்-மனைவி உறவு கனிவுடன் இருக்கும். ஆடை ஆபரண சேர்க்கைகும், வீடு, வாகனயோகத்துக்கும் வாய்ப்பு உள்ளது. உத்தியோகத்தில் விரும்பியபடி மாற்றங்கள் ஏற்படும். வழக்குகள் அனுகூலம் ஆகும். போட்டிபந்தயங்களில் ஆதாயம் கிடைத்திடும்.

## இடபம்

இந்த ராசியை சேர்ந்தவர்களுக்கு பணப்புழக்கம் அதிகம் இருந்தாலும் ஆடம்பரச் செலவுகளினால் செலவினங்கள் அதிகரித்தே இருக்கும். தொழில் துறையில் முன்னேற்றத்துக்கான மாற்றங்கள் காணும். உத்தியோகஸ்தர்களுக்கு இலாகாமாற்றம், இடமாற்றம் போன்றவை நிகழும். மருத்துவச் செலவுகளுக்கும் இடம் உண்டு. பழைய கடன்கள் பைசல் ஆகும். புதிய கடன்கள் ஏற்படவும் வாய்ப்பு உண்டு. எதிர்பாராத அதிர்ஷ்டத்துக்கும் இடம் உண்டு. முயற்சிக்கு தக்க பலன்கள் கிடைத்தே வரும். போட்டி பந்தயங்களில் ஆதாயம் கிடைத்திடும்.

## மிதுனம்

மிதுன ராசி நேயர்களுக்கு இப்போது மிகவும் அனுகூலமாகவே இருந்து வரும். பணப்புழக்கம் சரளமாகவே இருக்கும். தொழில்துறை முன்னேற்றத்துக்கும் ஆதாயத்துக்கும் குறைவிருக்காது. பழைய நெருக்கடி கடன்களை இப்போது பைசல் செய்து விடலாம். தொழில் துறையில் புதிய முயற்சிகளுக்கு வாய்ப்பு உண்டு. அடிக்கடி பிரயாணங்களுக்கும் இடம் உண்டு. மருத்துவச் செலவுகளும் இடம் பெறும். சொத்து சம்பந்தமாக பிரச்னைகள் எழும். இருந்தாலும் நல்ல முடிவுக்கு வந்துவிடும். வழக்குகள் இருந்தாலும் கவலைக்கு இடம் இல்லை. போட்டி பந்தயங்கள் ஆதாயம் தரும்.

## கடகம்

கடக ராசி நேயர்களுக்கு இக்காலம் குதூகலமாகவே இருக்கும். பணப்புழக்கம் தாராளமாக இருந்தாலும் தீட்டும் திட்டங்களினால் பணம் தண்ணீராய் செலவழியும். வீடு, மனை வாங்குவது அல்லது பழைய வீடு மராமத்து செய்வது, வாகன சேர்க்கை போன்ற திட்டங்களை இப்போது செயலாக்கம் பெறும். உடன் பிறந்தோர் உதவியும் கிட்டிடும். கொடுக்கல் வாங்கல்கள் திருப்தியாகவே இருந்து வரும் கணவன்-மனைவி உறவு சந்தோஷமாக இருக்கும். அலைச்சல்கள், வேலைப்பளு இருந்து வரும். செல்வாக்கு பெருகி வரும். போட்டி பந்தயங்களில் வெற்றி காணும்.

## சிம்மம்

இந்த ராசி நேயர்களுக்கு பொருளாதாரம் அதிகரித்தே புழங்கும். தொழில்துறை செம்மையாகவும், திறமையாகவும் செயல்படும். கணவன்-மனைவி உறவு சந்தோஷமாகவே இருக்கும். திடீர் அதிருஷ்டத்துக்கும் வாய்ப்பு உண்டு. அயல்நாட்டு பிரயாணங்கள் திட்டமிட்டபடி அமைந்திடும். புதிய ஒப்பந்தங்கள் செய்திடவும் கூடும். சில உத்தியோகஸ்தர்களுக்கு எதிர்பார்த்திருந்த பதவி உயர்வு கிடைக்கும். திருமணம் கை கூடும். வண்டி வாகன சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு. கூட்டுத் தொழிலில் உஷார் தேவை. போட்டி பந்தயங்கள் ஆதாயம் தரும்.

## கன்னி

இந்த ராசி நேயர்கள் இனிமையான எதிர்காலம் உருவாவதற்கான அறிகுறிகள் தோன்றுவதை காணலாம். எடுத்த காரியங்களை தங்கு தடையின்றி முடித்துவிடலாம். பணப்புழக்கம் அதிகரித்து தாராளமாக இருக்கும். தொழில் துறையில் புதியதொரு அமைப்பு இடம் பெறும். கூட்டுத்தொழிலும் சிலருக்கு ஈடுபாடு கொள்ள நேரும். உத்தியோகஸ்தர்களுக்கு பதவி உயர்வு, இடம்மாற்றம் ஏற்படும். வழக்குகளில் வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும். கணவன்-மனைவி உறவு கனிவுடன் காணும். ஆடை ஆபரண சேர்க்கைக்கும் இடம் உண்டு. போட்டி பந்தயங்களில் ஆதாயம் இருக்கும்.

## துலாம்

துலாம் ராசியைச் சேர்ந்தவர்கள் பெருமைக்குரிய பெரிய நன்மைகளை அடையலாம். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். தொழில் துறை வளர்ச்சி முன்னேற்றம் ஆதாயம் இருந்துவரும். குடும்பவகை சேமிப்புக்கு உதவும் வகையில் பணவரத்து அதிகரித்தே காணும். உடன் பிறந்தோர் மூலம் அனுகூலங்கள் உண்டு. சிலருக்கு வீடு, மனை வாங்குவதற்கும் சந்தர்ப்பம் கூடிவரும். வெளியூரிலிருந்து எதிர்பார்த்திருந்த தகவல்கள் நல்ல விதமாகவே வந்துசேரும். இக்காலகட்டத்தில் சில முக்கியமான திட்டங்கள் நிறைவேறும். போட்டி பந்தயங்களில் ஆதாயம் எதிர்பார்க்கலாம்.

## விருச்சிகம்

இந்த ராசி நேயர்களுக்கு சென்ற மாதம் இருந்ததைவிட இப்போது சற்று அனுகூலமாகவே இருக்கும். பணப்புழக்கம் சரளமாக இருந்து வரும். தொழில் துறையில் நிம்மதியான சூழ்நிலைமை காணும். உத்தியோகஸ்தர்களுக்கு செல்வாக்கு ஏற்படும். கணவன்-மனைவி உறவு சுமுகமாகவே காணும். சிலருக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்